# தமிழர் பொருண்மியம்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 07

26.02.2023



மரங்களும் நண்பர்களே!

06



காலம் தந்த செல்வம்

12



முன்னேறிவரும் வெற்றிப் பெண்

14



# இந்திய மீனவர்களுக்கு அனுமதி?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# இந்திய மீனவர்களுக்கு அனுமதியா? கொந்தளிக்கும் வடக்கு மீனவர்கள்!


பி.பார்த்தீபன்

> போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள்தான். வடபகுதியிலுள்ள கடல் மிகவும் சிறியது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் மீனவர்கள் இந்தக் கடலை நம்பித்தான் இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குவதாக இந்த லைசன்ஸ் முறை அமையப்போகின்றது.

வட கடலில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான "லைசன்ஸ்" வழங்கப்படும் என வெளியான அறிவிப்பு இலங்கை மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வாறு வழங்குவதற்கு முன்னர் எமக்கு நஞ்சைத் தாருங்கள் என வடக்கிலுள்ள மீனவர் ஒருவர் அறிவிக்கும் அளவுக்கு வடபகுதி மீனவர்கள் மத்தியில் இந்த அறிவிப்பு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தமது வாழ்வாதாரத்தை முற்றாகப் பறித்துவிடும் என அவர்கள் தெரிவிப்பதில் நியாயமிருக்கின்றது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில்தான் இந்தக் கருத்தை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

"இந்திய மீனவர்கள் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்தார்கள் என்றால் வடபகுதிக் கடல் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும். ஏனெனில் அவர்களிடம் பெருமளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் எமது மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாது. இரண்டு நாட்களுக்கு அவர்கள் தமது தொழிலை இழப்பார்கள். இது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. எமது வளங்களை அவர்கள் அள்ளிக்கொண்டு செல்லும் நிலைதான் காணப்படும்" என்று எச்சரிக்கின்றார் இவ்விடயம் தொடர்பில் செயற்பட்டுவரும் பேராசிரியர் சூசை ஆனந்தன்.

### அமைச்சரின் அறிவிப்பு

இலங்கையின் கடற்பகுதிக்குள் தினமும் 2000. 3000 இந்திய மீன்பிடிப் படகுகள் வரும் நிலையில் அவற்றை தடுக்க முடியாதுள்ளதாக எமது கடற்படையும்


பேராசிரியர் சூசை ஆனந்தன்

கூறுவதனாலேயே "லைசென்ஸ்" முறை மூலம் அந்தப் படகுகளின் வருகையை கட்டுப்படுத்துவதுடன் இந்த ""லைசென்ஸ் "மூலம் கிடைக்கும் பணத்தை அப்பகுதி மீனவர்களுக்குப் பிரித்துக்கொடுக்கவும் கலந்துரையாடுகின்றோம் எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இழுவை மடி வலை மீன்பிடிக்கு ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இந்தக் கருத்தை அமைச்சர் முன்வைத்தார். அமைச்சரின் உரையின் முக்கியமான பகுதிகள் வருமாறு -

"இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு அண்மையில் வந்தபோது கூட நாம் இதனைப்பற்றிப் பேசினோம். அதேபோன்று வெளிவிவகார அமைச்சிலும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அதிகாரிகளை அழைத்தும் கலந்துரையாடினோம்..

இதில் ஒரு தெரிவாகத் தமிழக மீனவர்களுக்கு "லைசென்ஸ் " ஒன்று கொடுக்க வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். அப்படி "லைசென்ஸ்" கொடுப்பதென்றால் அவர்கள் எமது பகுதிக்குள் எவ்வளவு தூரத்திற்கு வரலாம் என்பது பற்றி நாம் கலந் துரையாடிக்கொண்டிருக்கின்றோம்.

அதனால்தான் நாம் இரு நாடுகளுக்கிடையில் நல்லதொரு கலந்துரையாடல் இடம்பெற்று ஒப்பந்தமொன்றுக்கு வர முடியுமானால் "லைசென்ஸ்" வழங்க முடியுமென்றால் இந்திய கடற்படை மூலம் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியும்"

இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். அதாவது இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுவதை இதன் மூலமாக அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.



**எம்.பி.க்கள் எதிர்ப்பு**

எமது கடல் எல்லைக்குள் இந்திய.சீன அல்லது எந்தவொரு வெளிநாட்டு மீன் பிடிப் படகுகளுக்கும் அனுமதி கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட எம்.பி.சார்ள்ஸ் நிர்மலநாதன், எமது மீனவர்களின் பிரச்சினைக்குக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நிரந்தர தீர்வை காண முடியாது எனவும் கூறினார்.

"கடற்றொழில் தொடர்பில் குறிப்பிட்ட சில நாட்களாக குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வட பகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இது நாடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்த வேண்டும். மீனவ சமூகங்கள் இது தொடர்பில் கேட்கும்போது கடற்றொழில் அமைச்சர் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து செல்கின்றார்" என்றும் அவர் தெரிவித்தார்.

செல்வராஜா கஜேந்திரன் எம்.பி.யும் அரசாங்கத்தின் இந்த திட்டத்துக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

"ஒருபுறத்தில் வீழ்ந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை நாட்டின் ஒருபகுதியாக வலுக்கட்டாயமாக 1948 இல் இருந்து கையகப்படுத்தி வைத்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய பிரதேசத்தில் எங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள்.

வடக்கு கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அவ்வாறு நடந்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்களை அணி திரட்டி போராடுவோம்" என்று கஜேந்திரன் எச்சரித்திருக்கின்றார்.

**பேராசிரியர் சூசை ஆனந்தன்**

இந்தப் பிரச்சினை தொடர்பாகப் பேராசிரியர் சூசை ஆனந்தனிடம் தமிழர் பொருணமியம் சார்பில் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்த தகவல்களை இங்கு தருகின்றோம்

"இது நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது பாரதூரமான விளைவுகளைத்தான் வடபகுதி மீனவர்களுக்கு ஏற்படுத்தும். முதலாவதாக, இவ்வாறான உடன்படிக்கைகளைச் செய்யும்போது வடபகுதி மீனவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அறிவுஜீவிகள், மற்றும் இதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசித்துத்தான் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கம் தன்னிச்சையாக மேல்மட்டத்தில் உள்ள சிலரை இந்தியாவுக்கு அனுப்பி இது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. சர்வாதிகாரமான ஒரு முடிவாகத்தான் இதனை நாம் பார்க்கலாம்.

இப்போது, பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவிடமிருந்து பெருமளவு உதவிகளை இலங்கை பெற்றிருக்கின்றது. இதனால், அவர்கள் கேட்கும் அனைத்தையும் கொடுப்பதாக இலங்கையின் நிலை வந்துவிட்டது" என்று பேராசிரியர் சூசை ஆனந்தன் குற்றஞ்சாட்டுகின்றார்.

**2 லட்சம் மீனவர் பாதிப்பு**

போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள்தான் என்று தெரிவிக்கும் பேராசிரியர், இப்போது அரசாங்கம் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாட்டினால் சுமார் இரண்டு இலட்சம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படப்போகின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றார். வடபகுதியிலுள்ள கடல் மிகவும் சிறியது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் மீனவர்கள் இந்தக் கடலை நம்பித்தான் இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குவதாக இந்த லைசன்ஸ் முறை அமையப்போகின்றது எனவும் எச்சரிக்கின்றார்.

"எமது மீனவர்களுக்குத் தென்பகுதிக் கடலுக்குச் செல்வதற்கு முடியாது. அந்தப் பக்கத்தில் அனுமதிக்கமாட்டார்கள். அதேபோல ஆழ்கடலுக்குச்சென்று மீன்பிடிப்பதற்கான வசதிகளும் எம்மிடம் இல்லை. ஏனெனில் அதற்கான முதலீடுகள், அதற்கான வசதிகள், அதற்கான பயற்சிகள், துறைமுகங்கள் என எதுவுமே எம்மிடம் இல்லை. அதனால், ஆழ்கடல் மீன்பிடிக்கும் எமது மீனவர்கள் பெருமளவுக்குச் செல்ல முடியாதிருக்கின்றார்கள். வடமராட்சியில் ஒரு சிலர் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றாலும் 90 வீதமானவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்ல முடியாதவர்களாகத்தான் இருக்கின்றார்கள்" என்ற தகவல்களையும் பேராசிரியர் தெரிவித்தார்.

இப்போதும்கூட வாரத்தில் மூன்று நாட்கள் அவர்கள் அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் வருகின்றார்கள். இந்தக் காலப் பகுதியில் எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலைதான் இருக்கின்றது. இதனால், எமது வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. இது மட்டுமல்ல, சூழல் பாதிக்கப்படுகின்றது. எமது மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகின்றன. மீனவர்களிடையே மோதல்கள் ஏற்படுகின்றது. கடந்த வாரத்தில் கூட கடற்பகுதியில் ஒரு வாள்வெட்டுச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

**தடைசெய்யப்பட்ட வலைகள்**

இந்த நிலையில், இப்போது இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்களுக்கு வடபகுதிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாக ஆராயப்படுகின்றது. நாட்டுப் படகுகளுக்கு அனுமதிப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவற்றில் பயன்படுத்தப்படும் வலைகள் தங்கூசி வலைகளாகும். தங்கூசி வலைகள் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. இழுவை வலையும் தடைசெய்யப்பட்டிருக்கு. தங்கூசி வலையும் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

"அவர்கள் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்தார்கள் என்றால் வடபகுதி கடல் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் சென்று விடும். ஏனெனில் அவர்களிடம் பெருமளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் வடபகுதி மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாது. இரண்டு நாட்களுக்குள் அவர்கள் தமது தொழிலை இழப்பார்கள்" என்றும் எச்சரிக்கும் பேராசிரியர் தெரிவித்த மற்றொரு தகவல் அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

"இந்தியாவிலிருந்து தினசரி மூவாயிரத்துக்கும் அதிகமான படகுகள் வருகின்றன. வந்து எங்களுடைய வளங்களை

(23ஆம் பக்கம் பார்க்க)

**மின்மடல் : tamilseconomy@gmail.com**
**தொலைபேசி : 0777 276 949**

# முதலீடுகளுக்கான துரித அனுமதி?

முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் அவர்களுக்கான அனுமதியை துரிதமாகப் பெற்றுக்கொடுக்க பொருளாதார ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்ட காலம் செல்வது சிக்கலானது என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இதனால் நாடு பெருமளவு வருமானத்தை இழந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்கொண்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக நீண்டகாலத் தீர்வுகளில் பிரதானமானது முதலீடுகளை அதிகரிப்பதுதான். இதன்மூலமாக உற்பத்தியை, ஏற்றுமதியை அதிகரிக்கலாம். பலருக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து நாட்டில் அவர்களுக்கு சிறப்பான ஓர் எதிர்காலம் உள்ளது என்ற நம்பிக்கையைக் கொடுக்க முடியும். புத்திஜீவிகளின் வெளியேற்றத்தைத் தடுக்க முடியும். நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இது அவசியம்.

முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும், முக்கியமாக புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளுக்கு வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும் என்றும் பேசப்பட்டாலும், அதற்கான ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அனைத்தும் வெறும் பேச்சளவில்தான் இருந்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் இலங்கையில் முதலீடு செய்வதற்கு விரும்புகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் நாட்டு நிலை இல்லை.

இதற்குள் மூன்று விடயங்கள் உள்ளன. முதலாவது, ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இல்லை. இரண்டாவது – முதலீடுகளையும் இனவாதத்துடன் நோக்கப்படுகின்ற அரசியல். மூன்றாவது – இலங்கையில் காணப்படும் ஊழல்கள். அதாவது முதலீடுகளைச் செய்வதற்காக முன்வருபவர்களிடம் அதிகாரிகள் தமக்கு எத்தனை வீதம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் செயற்படுவது. இலங்கையிலும், பாகிஸ்தானிலும் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு ஊழல்கள்தான் பிரதான காரணம் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருந்தமை கவனிக்கத்தக்கது.

இந்த நிலையில் முதலீடுகளுக்கு துரிதமான அனுமதியை வழங்குவது குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு முக்கியமானது. முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குப் பதிலாக பொருளாதார ஆணைக்குழுவொன்றை நியமித்து ஒரே நிறுவனத்தால் முதலீடுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்ததன் பின்னர், அவர்களது வர்த்தகங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு 10 வருடங்கள் செல்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையை மாற்ற வேண்டும். ஜனாதிபதி சொல்லியிருப்பதைச் செயலில் காட்டுவதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக்காண்பதில் முதலாவது அடியை எடுத்துவைக்க முடியும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## மின்கட்டண உயர்வும் பொருளாதாரமும்

மின்கட்டண உயர்வு குறித்த கடந்த வார கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. மின் கட்டண உயர்வு நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையிட்டுப் பேராசிரியர் அமிர்தலிங்கம் தெளிவாக விளக்கியிருந்தார். அத்துடன், அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் குறித்தும் அவர் சாடியிருந்தார். இது போன்ற பொருளாதாரம் படிக்கும் மாணவர்களுக்கு உதவக்கூடிய கட்டுரைகளை தமிழர் பொருணமியம் வார இதழில் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

**என்.ரவீந்திரன், வந்தாறுமூலை, மட்டக்களப்பு**

## முருங்கைக்காயும் முந்தானை முடிச்சும்

முருங்கைக்காயும் முந்தானை முடிச்சும் என்ற தலைப்பில் ஆ.சி.கந்தராஜா எழுதிய கட்டுரை முருங்கைக்காய் குறித்த பயனுள்ள நாம் அறிந்திராத பல தகவல்களை வெளிப்படுத்தியிருந்தது. முருங்கைக்காயின் விதையில் இருக்கும் பென் ஒயில் என்பதன் பெறுமதி மற்றும் அதனுடைய பயன்கள் குறித்து அவர் தெரிவித்திருந்த கருத்துக்கள் எமக்கு புதிதாக இருந்தன. தமிழர் தாயகப் பகுதிகளில் முருங்கைக்காயின் விலை இப்போது பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றது. முருங்கைச் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதிலிருந்து பெறக்கூடிய ஏனையவற்றை – அதாவது பென் ஒயில் போன்றவற்றையிட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தக் கட்டுரை உணர்த்தியிருக்கின்றது. பேராசிரியர் கந்தராஜா இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்தும் எழுத வேண்டும்.

**மங்களா சண்முகம், - கண்டி**

**தமிழர் பொருணமியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தா தாரராகுங்கள்!

- **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
- **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House Pvt Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருணமியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருணமியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------


**முகவரி** - ------------------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ------------------------------------

**சந்தாக் காலம்** - ------------------------------------------------

**செலுத்திய தொகை** - ----------------------------------------

**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,71,400 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,87,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** நாட்டின் பொருளாதார நெருக்கடி குறைந்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். அப்படியானால், தேர்தலை நடத்த ஏன் பணம் இல்லாமல் போனது?

**க.ரவீந்திரன், வவுனியா**

**பதில் -** நாட்டில் பெற்றோலும், எரிவாயு போன்றனவும் ஓரளவுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கின்றன என்பதால் பொருளாதார நெருக்கடி குறைந்திருப்பதாக அர்த்தம் கொள்ள முடியாது.

உண்மையில் இதற்கான பணத்தை அரசாங்கம் எவ்வாறு பெற்றுக்கொண்டது என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றுவிட்டதாக பிரகடனப்படுத்தி கொடுக்க வேண்டிய கடன்களையும், வட்டியையும் அரசாங்கம் தாமதப்படுத்தி வருவது உங்களுக்குத் தெரிந்ததே. இதனால், கிடைக்கக்கூடிய பணம்தான் எரிபொருட்களையும், எரிவாயுவையும் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனைவிட உல்லாசப் பயணத்துறை மூலமாக கொஞ்சம் வருமானம் வரத் தொடங்கியிருக்கின்றது.

ரணிலின் பொருளாதாரக் கொள்கை என்பது நிலைமைகளைச் சமாளிப்பதற்கான உத்திகளாக மட்டும் இருக்கின்றதே தவிரப் பொருளாதார முன்னேற்றத்துக்காக உறுதியான நடவடிக்கைகள் எதனையும் அவர் முன்னெடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலை நடத்தாமல் அதனைப் பிற்போடுவதற்குப் பணம் இல்லை என்பது மட்டும்தான் காரணமல்ல என்பது அனைவருக்கும் தெரிந்ததுதானே!

---

**கேள்வி -** உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று யாழ். வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. மின்சார கட்டண உயர்வால் அவர்கள் மட்டுமா பாதிக்கப்பட்டுள்ளார்கள்?

**தர்மேந்திரன் தங்கவேல், மருதனார்மடம்.**

**பதில் -** அண்மையில் மின்சாரக் கட்டணங்கள் 66 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பல்வேறு துறைகளிலும் பல பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களிலுமாக மின் கட்டணம் 200 வீதம் அதிகரித்திருப்பதாகத் தெரிவிப்படுகின்றது.

எனவே உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் கட்டாயமாக நிவாரணம் வழங்க வேண்டும். குறிப்பாக வர்த்தகத் துறை சார்ந்தோருக்கும் இந்த மின் கட்டண அதிகரிப்பானது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என வர்த்தகர் சங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பானது மேலும் அதிகரித்து சாதாரண மக்கள் அத்தியாவசியப்பொருட்களை கொள்வனவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதும் உண்மை.

குறிப்பாக அரிசி ஆலைகள் அரிசி விலையை அதிகரிக்க இருப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். அவை போன்றவை ஏற்கனவே ஒரு நேர உணவுக்கே திண்டாடும் நிலையில் உள்ள மக்களை மேலும் பாதிக்கப்போகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படி இதனைச் செய்யும் போது, சாதாரண மக்கள் குறித்தும் அரசு சிந்திக்க வேண்டும். வர்த்தகர்கள், உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் எதனையாவது வழங்குவதன்மூலமாக இந்த நெருக்கடியைக் குறைக்க முடியும்.




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 300/= |
| உருளைக்கிழங்கு | - 150/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 130/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 160/= |
| கோவா | - 70/= |
| கரட் | - 200/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 220/= |
| வாழைக்காய் | - 180/= |
| சின்ன வெங்காயம் | - 300/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 350/= |
| கருணைக்கிழங்கு | - 90/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 280/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 400/= |
| முருங்கைக்காய் | - 1600/= |
| போஞ்சி | - 350/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 243/= |
| கனடா டொலர் - | 263/= |
| சீன யுவான் - | 51/= |
| யுரோ - | 378/= |
| ஜப்பான் யென் - | 2.6/= |
| சிங்கப்பூர்டொலர் - | 266/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 431/= |
| சுவிஸ் பிராங் - | 382/= |
| அமெரிக்க டொலர் - | 359/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 254/= |
| கனடா டொலர் - | 274/= |
| சீன யுவான் - | 54/= |
| யுரோ - | 393/= |
| ஜப்பான் யென் - | 2.7/= |
| சிங்கப்பூர் டொலர் | 276/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 446/= |
| சுவிஸ் பிராங் - | 399/= |
| அமெரிக்க டொலர் - | 368/= |



- பேராசிரியர்
ஆசி கந்தராஜா -

# மரங்களும் நண்பர்களே!

> புதிய இனங்களை வரவேற்கும் அதே வேளை நமது பாரம்பரிய இனங்களையும் அழியவிடாது காப்போம். என்னதான் இருந்தாலும் எங்கடை யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்த கறுத்தக் கொழும்பான் மாம்பழமும், கொடிகாமத்து பலாப்பழமும், நீர்வேலி மண்ணில் விளைந்த இதரை வாழைப்பழமும் எமது இனத்துவ அடையாளமல்லவா?

மனிதர்கள் மட்டுமல்ல, மரம் செடி கொடி பூண்டு யாவும் எமது நண்பர்களே.

எங்கள் ஊருக்கு அப்போது மின்சாரம் வரவில்லை. துலாக் கிணறு, அரிக்கன் லாம்பு, விறகடுப்புடன்தான் வாழ்க்கை. நாங்கள் குடியிருந்த காணி, ஒரு சொரியல் காணி. அடி வளவிலுள்ள துலாக் கிணறும் சொரியல் கிணறுதான். இது அயல் வீட்டாருக்கும் சொந்தமானதால், குளிக்கிற தண்ணி எந்த வாய்க்காலில் பாய்வதென்பதில் சண்டைவரும். எங்களுடன் வாழ்ந்த ஆச்சி அம்மாவின் அம்மா, வலு கெட்டித்தனமாக இதைச் சமாளிப்பார். அவர் ஒரு கைம்பெண். எத்தனையோ விஷயங்களைத் தனித்து நின்று சமாளித்ததால் வைரம் பாய்ந்த மனுஷி. வெற்றி தோல்விகளை யதார்த்தமாக எடுத்துக் கொள்ளும் பக்குவத்தை ஆச்சியிடம்தான் கற்றுக் கொள்ள வேணும். இப்படிப்பட்ட ஆச்சியின் வழி காட்டலில் நாங்கள் கூட்டுக் குடும்பமாகக் குடியிருந்தோம்.

எங்கள் ஊர், ஒரு கலட்டிப் பாங்கான பூமி. இருந்தாலும் பலர் கமத்தை நம்பியே வாழ்ந்தார்கள். பாட்டன், பூட்டன் காலத்தில், கல்லுக் கிளப்பி, மண்கொட்டி, இருவாட்டி மண்ணாக்கப்பட்ட தோட்டங்களில், காசுப் பயிர்களான தறிகாம்பு புகையிலையும், மிளகாயும், பட்டை இறைப்பிலும், மாட்டெருவிலும் அமோகமாக வளர்ந்தன. மேலதிகமாக, கலட்டி நிலங்களை உழுது, விவசாயிகள் வரகு விதைத்தார்கள். புகையிலை வெட்டிய கையோடு தோட்டத்தில் சாமையும் குரக்கனும் பயிரிட்டார்கள்.

நான் ஊரிலிருந்த காலங்களில் வீட்டைச்சுற்றி ஆச்சி நிறைய மரங்களை நட்டிருந்தார். அவற்றுக்கு நானே அடிவளவுக் கிணற்றிலிருந்து தண்ணி அள்ளி, ஊற்றுவேன். அவற்றின் வளர்ச்சி என்னைப் பூரிக்க வைத்தது. பாட்டன் காலத்தில் நட்ட தென்னை மரங்கள் நிறையக் காய்த்தன. இடையிடையே கமுக மரங்கள். கிணத்தைச் சுற்றி கதலி, கப்பல், மொந்தன், என வாழை மரங்களை பெரியம்மா நட்டிருந்தார். இவைகளுக்குக் குளிக்கிற தண்ணீர் ஒழுங்காகப் பாய்ந்தது.

அடி வளவில் இரண்டு பலா மரங்கள் நின்றன. அதில் ஒன்று, கிணத்தையொட்டிச் சடைத்து நின்ற செண்பகவரியன் இனம். சோக்கான பழம், தேன் ஒழுகும். மற்றது கூழன் பலா. இதன் சுளைகள் சிதம்பிய நிலையில் இருக்கும். தொண்டையால் இறங்காது. இதனால் பழுக்க முதலே அதை பிஞ்சிலே ஆய்ந்து, அரிந்து ஆச்சி ஆட்டுக்கு வைத்துவிடுவார். ஆட்டுக் கொட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு கறுத்தக் கொழும்பான் மாமரம், அரைப் பரப்புக் காணியை ஆக்கிரமித்திருந்தது.

வீட்டுக் குசினியை அண்டி, சட்டி பானை கழுவும் இடத்தில் அம்மா இதரை வாழைகளை நட்டிருந்தார். அது யாழ்ப்பாணத்து இனம். பழம் சிறிது, ஆனாலும் சுவை அதிகம். இதரை வாழை மர மடலுக்குள்த்தான் ஆச்சி வெத்திலை, இஞ்சி போன்ற வற்றை வைத்து மரத்துடன் மடலைச் சேர்த்துக் கட்டிவிடுவார். மின்சாரம் இல்லாத அன்றைய காலங்களில் அதுதான் எமது குளிர்சாதனப் பெட்டி. யாழ்ப்பாணத்து இதரை இனத்தை "குருக்கன்" எனப்படும் வைரஸ் நோய் தாக்காது. இருந்தாலும் இந்த இனம் இப்பொழுது பராமரிப்பின்றி அழிந்துவிட்டதால், கொழும்பு இதரையே

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும். தொடர்புகளுக்கு - 0766482303

---

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் பண்ணை வேலைகளுக்கு ஆள் தேவை 0774292500

---

விசுவமடுவில் பண்ணை வேலைக்கு ஆள் தேவை. தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது - 0774939391

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம்வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு. தொடர்புகளுக்கு 0777299386

---

காரைநகரில் "பல்லுயிர்" பனை சார் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. +94775789342

---

உழவியந்திர சாரதி தேவை. கிளிநொச்சி - 0776737535

---

விளம்பரம் சேகரிப்பாளர் (Advertise -ments Collector) முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கபடும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. light vehicle driving license - B, C, G1 சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு 0770684905

---

### தேவை

காரைநகரில் நெல் அறுவடை அறுவடை செய்யும் இயந்திரம் தேவை. நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வெட்டலாம் +94775789342

---

விதை இஞ்சி விதை மஞ்சள் தேவை. கண்டிக்கு அனுப்பக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். - 0777 90 6383

---

விவசாயத் தகவல்கள் தமிழ் இணைய வலைதளத்திற்கு கட்டுரைகள், ஆக்கங்கள் தேவை. 0772984757

---

மாட்டுத் தீவனத்துக்காக புல் பயிர் செய்கை செய்து தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

---

ஒரே பிரதேசத்தில் 50 தொடக்கம் 100 ஏக்கர் வரை தேவை. 0777 90 6383

இந்திரா குழுமம் கிளிநொச்சி.

---

### விற்பனைக்கு

ஒரு நாள் பத்து நாள் ஒரு மாத கோழிக் குஞ்சுகள் விற்பனை. பரந்தன், கிளிநொச்சி 742242067

---

முழு உளுந்து உடைக்கும் இயந்திரங்கள் விற்பனைக்கு. லட்சுமி மோட்டார்ஸ் கிளிநொச்சி 0775070675

---

மாட்டுக்கான அடர் தீவனம் விற்பனை. +94778586884 ராணி தீவனம் தருமபுரம்

---

கோழி தீவனங்கள் மாட்டு தீவனங்கள் தொகையாக தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும். - +94771117080 கொழும்பு

---

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு - 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 5 - 7 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு 0766482303

---

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில்
உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

08

ஞாயிற்றுக்கிழமை
26.02.2023

## வரி விளம்பரம்




## classified advertisement

தரமான காய்கறி மற்றும் பூ மரக் கன்றுகள் அலங்காரத் தாவரங்கள் விற்பனை.
+94768965999, வன்னி மலர் காடு கிளிநொச்சி

---

பிவிசி குழாய்களை மொத்தமாக குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள PVC.LK , கிளிநொச்சி 0777885114

---

புத்தகப் பைகள் மற்றும் கைப்பைகளை பெற்றுக்கொள்வதற்கு நாடுங்கள். 076 3620131

---

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திரங்கள் விற்பனைக்கு உள்ளன. 0777 906 383. இந்திரா குழுமம்

---

மாட்டு தீவன ஊறுகாய்ப்புல் அல்லது சைலேஜ் விற்பனை.
மாங்குளம் - 0775138954

---

இலங்கை முழுவதும் விதைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். அபி அக்ரோ யாழ்ப்பாணம் - 0763804310

---

ரசாயன கிருமிநாசினிகள் பூச்சி நாசினிகள் தெளிக்கப்படாத ( செயற்கை உரம் இட்ட) வெள்ளை சிவப்பு நெல் மற்றும் அரிசிகள் விற்பனைக்கு.
0777 90 6383 இந்திரா குழுமம்

---

தேனீ வளர்ப்பு பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. 0766484625 மதுரம் தேனீ பண்ணை, காரைநகர்

---

மிகத் தரமான சுவையான கச்சான் லட்டு மற்றும் கேக் வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள். +94 77 131 7941

---

இயற்கை மணம் வீசும் அனைத்து வகையான வடகங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள். +94 77 915 1820

---

மிகத் தரமான பாடசாலைப் பைகளை பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். 0772034807

---

மிகத் தரமான தோற் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு.
+94 77 255 6014

---

தானிய கஞ்சி கலவை மற்றும் சத்துமா போன்ற பொருட்களை பெற்றுக் கொள்ள நாடுகள். +94 76 022 5528

---

தும்பு உற்பத்தி பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம். +94 76 435 6713

---

சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக்கொள்வதற்கு அழைக்க வேண்டிய தொடர்பிலக்கம். 0765448359

---

### சேவை

கிளிநொச்சி இரணைமடுத் தானியக் களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்த முடியும். - 773043368

---

வட மாகாணத்தில் இனி வரும் சிறு போகத்தில் இயந்திரத்தினால் நெல் நடவு செய்து தரப்படும். - 0777 90 6383 இந்திரா குழுமம். கிளிநொச்சி

---

மரக்கறிகள், பழங்கள் நேரடி வீட்டு விநியோகம். விநியோகக் கட்டணம் உண்டு.
FreshMart. - 0777 90 6383

---

உணவு பால் உற்பத்தி சார்ந்த தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.
0772281413 கிஷோ. Nutra Tec

---

விவசாய இயந்திர வாகன உதிரிப் பாகங்கள் தோட்டங்கள் வயல்களுக்கு மற்றும் திருத்தல் நிலையங்களுக்கு நேரடி விநியோகம் கிளிநொச்சி.
765651141 கவியார்த்தனன்

---

வட மாகாணத்தில் டிப்பரில் கல் மண் கட்டட பொருட்கள் ஏற்றித் தரப்படும்.
0094777738536

---

உணவு விற்பனை நிலையங்களுக்கு மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு பஜ்ஜி செய்து தரப்படும்.
0777885114

---

மரச்செக்கு சேவைகளுக்கு மோகன் மரச்செக்கு வட்டக்கச்சி - +94770156630

---

கிளிநொச்சியில் வீட்டு மின் இணைப்பு நீர்க் குழாய் பொருத்துதல் வேலைகளுக்கு. - 742242067

---

ஜேசிபி கனரக வாகன சேவை கிளிநொச்சி - 0773597787

---

வட மாகாணத்தில் உயிர் வாயு தொகுதி ஒன்றை பொருத்திக்கொள்ள 0763103565 சுரேன். Thaayin Care PVT LTD

---

பாலிமர் ரப்பர் முத்திரை ஒரு மணித்தியாலத்தில் செய்துதரப்படும். - சிவா பிரின்ட்ரேஸ், கிளிநொச்சி. 0775346766

---

உங்கள் வியாபாரங்களுக்கு இணையதளங்கள் மென்பொருள் சேவைகள் வழங்குகின்றோம். +94774404456 அகமதி குழுமம் Kilinochchi

---

உங்கள் வீட்டு நல்ல நிகழ்வுகளுக்கு இயற்கையான உடன் தயாரித்த பழரச பானங்களை வழங்குகின்றோம். 212285726 - அம்மாச்சி, கிளிநொச்சி

---

வானிலை தகவல்களை தினமும் இலவசமாக தெரிந்துகொள்ள இந்த இலக்கத்திற்கு ஒருமுறை whatsapp செய்யுங்கள்.
0772984757
www.agricultureinformation.lk

---

கொழும்பு யாழ்ப்பாண மின்சாரக் கார். வாடகை சேவை. - 0779744972

---

இயற்கை முறையில் காய்கறிகள் பழங்கள் உற்பத்தி செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும் விற்பனை வாய்ப்புச் செய்து தரப்படும். - 0777 90 6383 FreshMart Online Veg Store

---

உங்கள் விவசாயப் பண்ணைகளில் விளைச்சலைக் கூட்ட வேண்டுமா ?? தேனீப் பெட்டி வைத்து பராமரித்துத் தரப்படும். 0766484625 - மதுரம் தேனீப் பண்ணை. காரைநகர்.

---

மிக வேகமாக சேவையினை தருவதற்கான அரிசி ஆலை.
0776992443

---

பெண்களுக்கான ஆடைகளை மிகச் சிறந்த முறையில் வடிவமைப்பதற்கு நாட வேண்டிய இடம். 0740824712

---

### கல்வி

பகுதி நேர விவசாய NVQ 3 ரூ 4 நேரடி செயல்முறை கல்வி. 0777 90 6383 இந்திரா குழுமம், கிளிநொச்சி

---

அபாகஸ் வகுப்புக்கள். கிளிநொச்சி 0094779361624

---

(09ஆம் பக்கம் பார்க்க)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டிலும் பயிரிடப்படுகிறது. இவற்றின் பழம் பெரிதென்றாலும், சுவையில் யாழ்ப்பாண இதரைக்கு கிட்டவும் நிக்காது.

ஊரிலுள்ள மரங்களெல்லாம், பெரும்பாலும் "காடுவசாரி"யாய் கட்டுப்பாடின்றி வளர்ந்தனவே. மரங்களை முறைப்படி கவ்வாத்துப் பண்ணி வளர்த்தால், ஒரு மரம் நின்ற இடத்தில் பல மரங்களை நட்டு நிறையப் பயன் பெறலாம்.

மா மரங்கள் உலர் வலயத்துக்கே உரித்தான பயிர். அவை குளிர் பிரதேசத்தில் நல்ல விளைவைக் கொடுக்கமாட்டா. விஞ்ஞானரீதியாகப் பழமரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை குறைகுளிர்



வகை, நிறைகுளிர் வகை, குளிர் தேவையற்ற வகை, தாவர உடற்கூறு இயல்பின்படி அப்பிள் போன்ற தாவரங்கள் பூப்பதற்கும் காய்ப்பதற்கும் குறிக்கப்பட்டளவு மணித்தியாலங்கள் குளிர் தேவை. ஆனால், மாமரம் பூப்பதற்கு குறிக்கப்பட்டளவு வெப்பம் தேவை.

ஐரோப்பாவின் குளிர் சுவாத்தியத்தில் வளர்ந்த அப்பிளை யாழ்ப்பாண சுவாத்தியத்தில் வளர்த்தால் அது நல்ல விளைவைக் கொடுக்கமாட்டாது. இதே போல, நுவரேலியாவில் வளரும் பிளம்ஸ் மரத்தை யாழ்ப்பாணத்தில் வளர்த்தால் அந்த மரம் பூக்காது. இதேபோன்றுதான் யாழ்ப்பாண மாமர இனங்கள் இலங்கையின் மத்திய மலைப்பிரதேசங்களில் நன்கு காய்ப்பதில்லை. இவையே பழமரங்கள் காய்ப்பதிலுள்ள சூட்சுமங்கள்!

இலங்கையில், மா மரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பின்வளவிலேயே நிற்கும். தன்னிச்சையாக வளர்ந்து பெரிய இடத்தைப் பிடித்துக் கொள்ளும். மாமரங்களை வரிசையாக நடவேண்டும். கறுத்தக் கொழும்பான் மாமரங்களை நடும்போது, வரிசைகளுக்கு இடைப்பட்ட தூரம் ஏழு மீட்டரும், வரிசையிலுள்ள மரங்களுக்கிடையில் ஆறு மீட்டரும் இருக்கவேண்டும் என்கிறது உசாத்துணை நூல்கள். இது கறுத்தக் கொழும்பான் ஒட்டுக் கண்டுகளுக்கே பொருந்தும்.

பாரம்பரிய மா மர இனங்களை எவரும் கவ்வாத்துப் பண்ணுவதில்லை. இலங்கையில் மாம்பழத்துக்குப் பெயர்போன யாழ்ப்பாணத்திலே வணிக ரீதியாக தோட்டத்தில் அல்லது தோப்பில் மாமரங்கள் வளர்க்கப் படுவது குறைவு. அது மட்டுமல்ல இலங்கையில் ரொம் ஈ.ஜே.சி (ரீஜேசி) என்ற புதிய மாமர இனம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு எமது பாரம்பரிய இனங்களான கறுத்தக் கொழும்பான், செம்பாட்டான, அம்பலவி போன்ற மாமரங்களை நடுவதும் பராமரிப்பதும் வெகுவாகக் குறைந்துள்ளன. அத்துடன் பாரம்பரிய இனங்கள் அதிகம் காய்ப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் சொல்லப்படுவதுண்டு. இது மரத்தின் குற்றமல்ல. மாமரங்களைப் பராமரிக்காத மனிதர்களின் குற்றமே.

மாமரத்தில் இளம் கிளைகளின் நுனிக்குருத்தே பூக் களாக மாறும். பெரிய மா மரங்களின் கிளைக்கூடலின் உட்பகுதியில் இளம் குருத்துக்கள் இல்லாததால் மாமரத்தின் கிளைக்கூடலின் வெளிப்பகுதியில் மாத்திரம், பூக்கள் தோன்றி மாங்காய் காய்க்கும். உட்பகுதிக் கொப்புக்க



ளிலுள்ள கிளைகளில் மிக அரிதாகவே பிஞ்சு கள் தோன்றும். மாமரத்தைக் காட்டு மரங்கள்போல வளரவிடின், ஒரு பரப்புக் காணியில் ஒரு மாமரம் வளரவே இடம் காணும். இதுவே நாம் நமது பாரம்பரிய மாமர வளர்ப்பில் விட்ட தவறு.

மாங்காய் பிடுங்கியவுடன் மரத்திலுள்ள அரைவாசிக் கிளைகளை, குத்து மதிப்பாக நான்கு சென்றி மீற்றர் கீழே வெட்டிவிட வேண்டும். இந்த "வெட்டு" கிளையிலுள்ள கணுவுக்கு மேலே இருக்கவேண்டும். அப்போதுதான் அடுத்துவரும் மாரி மழைக்கு, கணுவில் இருந்து பக்க அரும்புகள் தோன்றி வளர்ந்து, அதன் நுனிக் குருத்து அடுத்த வருடம் பூக்காம்பாகும். இதேபோல அடுத்த வருடமும் மிகுதிக் கிளைகளை வெட்டிவிட வேண்டும். இந்தவகையில் ஒரு பெரிய மரத்தின் கிளைக் கூடலின் வெளிப்புறத்தில் காய்க்கும் மாங்காய்களைவிடச் சிறிய கிளைக் கூடல்கள் கொண்ட பல மாமரங்களில் அதிக மாங்காய்களைப் பெறமுடியுமென் பதை அனுபவரீதியாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

கொய்யா, அவக்காடோ, மாதுளை போன்ற மரங்களில் பக்க கணுவிலிருந்தே பூக்கள் தோன்றுவதால், இவற்றை ஆழமாகவும் கவ்வாத்து பண்ணலாம். வருடாவரும் கொஞ்சம் கொஞ்சமாக கிளைகளைக் கவ்வாத்துப் பண்ணினால், பழங்களின் எண்ணிக்கை சீராக இருக்கும்.

கவ்வாத்து என்பது அந்த தாவரத்தின் உடற்றொழிற் பாட்டுக்கும் கால நிலைக்கும் இயைந்ததாக இருக்கவேண்டும். கண்டபடி கிளைகளை வெட்டி எறியக்கூடாது. கவ்வாத்துப்பண்ணுவதற்கு முன்பு கமத்தொழில் இலாகா உத்தியோகத்தர்களுடன் கலந்து ஆலோசியுங்கள். கண்டபடி வெட்டிவிட்டு, காய்க்கேல்லை என்று என்னைக் குற்றம் சாட்டவேண்டாம்.

தற்போது புதிய இனமான ரீஜேசி மாமரங்களை கவ்வாத்துப் பண்ணுவதை இலங்கையில் கண்டிருக்கிறேன். அந்த முறையையே, நமது பாரம்பரிய இனங்களுக்கும் பாவிக்கலாம்.

புதிய இனங்களை வரவேற்கும் அதே வேளை நமது பாரம்பரிய இனங்களையும் அழியவிடாது காப்போம். என்னதான் இருந்தாலும் எங்கடை யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்த கறுத்தக் கொழும்பான் மாம்பழமும், கொடிகாமத்து பலாப்பழமும், நீர்வேலி மண்ணில் விளைந்த இதரை வாழைப்பழமும் எமது இனத்துவ அடையாளங்களல்லவா? *

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## காணி விற்பனைக்கு

பாரிய ஒருங்கிணைந்த பண்ணைகள் அமைக்கக்கூடிய 25 ஏக்கர் 50 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட காணிகள் தேவை.

இந்திரா குழுமம் 0777 90 6383

-------------------------------------

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு - 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

## வீடு வாடகைக்கு

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 0777277009



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# பங்குச்சந்தை முதலீடு

> பங்குக்கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளும் நேரங்களில் பங்குதாரரின் இலாப நட்டமானது ஒருவரின் நுட்பமான சந்தை கண்காணிப்பிலும், ஒருவரது கொடுக்கல் வாங்கல் திறன் நிலையிலும் அதிகம் தங்கியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஒருசில கம்பனிகளின் வினைத்திறனற்ற செயற்பாட்டின் மூலமும் பங்குதாரருக்கு நட்டம் ஏற்படலாம்.

“பில்கேட்ஸ்” (Bill Gates) போன்று வர வேண்டும், “அம்பானி” (Mukesh Ambani) போன்று வரவேண்டும், “அதானி” (Gautam Adani) போன்று வரவேண்டும் என்று இன்றைய கால இளைஞர்கள் கூறுவது வாசகமாக இருக்கின்றது. அதற்கு கல்வி, செல்வாக்கு, தொழில் போன்ற பல காரணங்கள் இருந்தாலும் மேற்கூறிய பிரபல்யமானவர்கள் உலகத்தில் உள்ள பணக்காரர்கள் பட்டியலில் முதன்மை இடத்தை பெறுகின்றார். அவர்கள் எவ்வாறு அந்த உயர்ந்த இடத்தில் உள்ளார்கள் என்று நாம் சற்று ஆராய்வோமானால் அதற்கு முதன்மை காரணமாக இருப்பது அவர்கள் முதலட்டாளராகவும் உரிமையாளராகவும் இருக்கின்ற கம்பனிகளின் பங்குகள் அதி உச்ச விலையில் இருப்பதேயாகும்.

மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் விரும்புவது சிறந்த கல்வி, நல்லொழுக்கம், நல்ல குடும்பம், மற்றும் சந்தோஷமான வாழ்க்கை என்பவற்றுடன் சிறந்த ஒரு செல்வந்தனாக இந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதேயாகும். இதை அடைந்து கொள்வதற்கு பல நேர்வழியான முறைகள் இருந்தாலும் சிறந்த ஒரு முறையாக நிரூபிக்கப்பட்ட ஒரு மார்க்கமாக இருப்பது தான் “பங்குச்சந்தை முதலீடு”. எனவே நாம், பங்கு என்றால் என்ன? எவ்வாறு பங்குச்சந்தையில் ஈடுபடலாம்? என்பதனை இங்கே பார்ப்போம்.

### பங்கு (Share) என்றால் என்ன?

வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி தாம் அனுமதித்த மூலதனத்தினை குறித்த அலகினால் (Shares) வகுத்து பெறப்படுவது பங்கு எனப்படும். மற்றும் “வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் உரிமையை சிறிய அலகுகளாகப் பிரிக்கும் போது ஓர் அலகின் பெறுமதியும் பங்கு” எனக் கருதப்படும்.

### பங்குச்சந்தை (Share Market) என்றால் என்ன?

பொருட்களை வாங்கவும் விற்கவும் பலரும் கூடுமிடம் சந்தை. அது போல, பங்குகளை (Shares) வாங்கவும் விற்கவும் செய்யும் இடமே பங்குச்சந்தை எனப்படும். பங்குச்சந்தைக்கு ஒரு குறிப்பிட்ட இருப்பிடம் தேவையில்லை. கணினி மற்றும் முகவர்கள் (Brokers) மூலமாக பங்குகளை வாங்கவும் விற்கவும் முடியும். குறிப்பிட்ட சில நீண்ட கால கருவிகள் (பங்குப் பத்திரங்கள் அல்லது தொகுத்திக் கடன் பத்திரங்கள்) பரிமாற்றப்படும் இடம், பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளினால் (Listed Company) விநியோகிக்கப்படும் பங்குகள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற பிணைப்பத்திரங்கள் கொள்வனவு மற்றும் விற்பனை இடம்பெறும் சந்தையே பங்குச் சந்தை ஆகும்.

இலங்கையில் பங்குச்சந்தை கொடுக்கல்வாங்கல்களை ஏற்படுத்துவது கொழும்பு பங்கு பரிமாற்று நிறுவனத்தின் (CSE-Colombo Stock Exchange) மூலமேயாகும்.

### பங்குச்சந்தை முதலீடு என்றால் என்ன?

ஒவ்வொருவரும் தமது கையிலுள்ள பணத்திற்கு சமனான வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளினை (Listed Shares) கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக கொள்வனவு செய்ய பயன்படுத்தும் பெறுமதி, பங்கு முதலீடு எனப்படும்.

### எவ்வகையான பங்குகளில் முதலீடு செய்ய முடியும்?

சாதாரண பங்குகள் (Ordinary Shares), முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares), பங்கு ஆணைப்பத்திரங்கள் (Share Warrants) மற்றும் கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்கள் (Corporate Debentures)

### எவ்வாறு பங்குகளை கொள்வனவு செய்ய முடியும் (Share Purchases)?

மிகப்பொதுவான வழிமுறை பங்குத்தரகர் (Share Broker) மூலம் நடைபெறும் முறையாகும். அவர்கள் முழுநேர சேவை அளிப்பவர்களோ, அல்லது தள்ளுபடி செய்யும் விற்பனையாளராக விற்பனையாளரிடமிருந்து வாங்குவோர்க்கு பங்கு மாற்றத்தை ஏற்பாடு செய்து தருகின்றவர்களாகவோ இருப்பர். கம்பனிகளால் வெளியிடப்படும் பங்குகளை வாங்கும் பணத்தை முதலீடு செய்யக்கூடிய மற்றுமொரு முறை சார் முதலீட்டு வழிமுறையாகும். பங்குச்சந்தையின் மூலம் பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியும். அதாவது வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பங்குகளை வெளியிடும் போதோ (IPO- Initial Public Offering) அல்லது பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் (Shareholders) அவற்றை மீள விற்கும்போதோ பங்குகளை (Listed Shares) வாங்கலாம்.

### எவ்வாறு விற்பனை செய்ய முடியும்?

பங்கினை விற்பனை செய்வதென்பது வழிமுறைரீதியாக பங்கினை வாங்குவதற்கு ஒப்பானது.

### எப்பொழுது விற்பனை செய்ய வேண்டும்? (Share Disposal)?

பொதுவாக முதலீட்டாளர்கள் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்க விரும்புவார்கள், அம்முறையில் இல்லாவிட்டால் குறுகியகால விற்பனையைக் கொண்டிருக்கும். இருந்தாலும் எண்ணற்ற காரணங்கள் ஒரு முதலீட்டாளரை

அவ்வாறு விற்கத் தூண்டலாம். ஒரு பங்கின் விற்பனையில் தரகரின் முயற்சிக்கான கட்டணம் (Share Broker Fee) விதிக்கப்படுகிறது. இது விற்பவரிடமிருந்து வாங்குபவருக்கு மாற்றம் செய்து கொடுக்கும் ஏற்பாட்டிற்காக விதிக்கப்படுகிறது. இக்கட்டணமானது அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதென்பது எந்த வகையான தரகுக் கொள்வனவு மற்றும் விற்பனைக்கு இடைப்பட்ட கால எல்லையைக்கொண்டது (within one Day or more than one day), முழு நேர சேவையா அல்லது எந்த தள்ளுபடி விற்பனைப் பரிமாற்றத்தைக் கையாளுகிறது போன்றபலவற்றைச் சார்ந்தது. பரிமாற்றம் செய்யப்பட்டப் பிறகு விற்பனையாளருக்கு முழுப் பணமும் அதன் பிறகு உரிமையுடையதாகின்றது.

### எவ்வகையான வருமானங்களினை பெறமுடியும்?

மூலதன இலாபம் (Capital Gain), பங்குலாபம் (Dividend income), Bonus Share, Right Options,others non cash benefits.

வரிச் சலுகைகள்

மூலதன இலாபம் (Capital Gain)

ஈட்டப்படுகின்ற மூலதன லாபத்திற்கு முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

பங்குலாபம் (Dividend Income)

பெறப்படுகின்ற பங்குலாபத்திற்கு 15% தடுத்து வைத்தல் வரி (Withholding Tax) கழிக்கப்பட்டு மிகுதி இலாபமாக பங்குதாரர்களிடம் வழங்கப்படும். இதுவே கடைசி வரியாக கருதப்பட்டு அதற்கு மேலதிகமாக வரியொன்றும் அறவிடப்படமாட்டாது. (15% WHT will be treated as Final Tax for Dividend Income).

### எப்போதும் நிரந்தர வருமானம் கிடைக்குமா ?

வர்த்தக வங்கிகளின் வைப்புகளைப் போன்று (Fixed Deposit, Saving Deposits etc.) ஒரு நிலையான அல்லது நிரந்தர வருமானத்தினைப் பங்குச்சந்தை வியாபரத்தில் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அதற்கு மாறாக அதிக வருமானத்தினைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படும். இதனாலேயே பங்குச்சந்தை வியாபரத்தில் “High Risk – High Return” எனும் தன்மை காணப்படுவதாக வியாபார நிபுணர்கள் கூறுகின்றனர்.

நட்டம் ஏற்படுமா? எவ்வாறான நட்டம் ஏற்படக்கூடும்? அந்நட்டத்தினை எவ்வாறு தவிர்த்துக்கொள்ள முடியும்?

பங்குக்கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளும் நேரங்களில் ஒருவரின் நுட்பமான சந்தை கண்காணிப்பிலும், ஒருவரது கொடுக்கல் வாங்கல் திறன் நிலையிலும் அதிகம் தங்கியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஒருசில கம்பனிகளின் வினைத்திறனற்ற செயற்பாட்டின் மூலமும் பங்குதாரருக்கு நட்டம் ஏற்படலாம். எனவே மிகவும் அவதானமாகவும் சிறந்த ஆலோசனைகளினைப் பெற்றும் அதற்கிணங்க மிகவும் இலாபம் பெறும் பங்குகளை அல்லது நல்ல வினைத்திறனுள்ள நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்து பின்னர் சரியான நேரத்தில் விற்பனை செய்யும் பொழுது இவ்வாறான நட்டத்தினைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

“பங்குச்சந்தை விளையாட்டு” மிகுந்த கவனத்துடன் ஆடப்படவேண்டும். விழிப்புடன் இருந்து முடிவுகளை உடனடியாகச் செய்வது மிகமிக அவசியமாகும். நாள் வணிகத்தில் (Daily Share Trading) ஈடுபடுபவர்கள் தொடர்ந்து சந்தையைக் கண்காணித்தவண்ணம் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பங்கிற்கும் இலாபமோ நட்டமோ இல்லாத நிலை (Breakeven Point) என்று ஒன்று உண்டு. அதை என்றும் மறக்காதீர்கள். விலை சரிகையில் அதன் அடிவரை (Bottom Rock) சென்று விழும் வரை காத்திருக்காதீர்கள். இலாபமோ நட்டமோ இல்லாத நிலையில் அதனை தொடுகையில் விற்பனை செய்து விடவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் ஏற்படக் கூடிய நட்டத்தினை சாதுரியமாக தவிர்த்துக்கொள்ள முடியும். மற்றும் பங்குச் சந்தையில் எதிர்நீச்சல் அடிக்க இக்கொள்கை நிச்சயமாக உதவும். எல்லோரும் ஒரு பங்கில் ஆர்வம் செலுத்தி கொள்வனவு செய்கையில் அப்பங்கின் விலை அதிகரிக்கும். அப்பொழுது கையில் அப்பங்குகள் இருப்பின் விற்றுவிடவேண்டும். இதன் மூலம் நல்ல மூலதன இலாபம் (Capital Gain) பெற்றுக்கொள்ளமுடியும். மற்றும் சிறந்த ஆலோசனையின்றி முன்பின் தெரியாத சிறிய நிறுவனங்களின் பங்குகளில் (Penny Shares) முதலீடு செய்வதனை அறவே தவிர்க்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நட்டத்தினை தவிர்ப்பது மட்டுமன்றி முதலீடு செய்த தொகை இழப்பினையும் இல்லாமல் செய்ய முடியும் (avoid loss of Capital).

ஒரு பங்கின் பழைய வரலாற்றை மற்றும் செயல்பாட்டினை மட்டும் நம்பி அப்பங்கினை வாங்காதீர்கள்.

அதன் எதிர்காலத்தைக் குறித்த கணிப்புகளின் அடிப்படையில் (Going Concern) பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும்.

முதலீடு செய்ய விரும்பும் தொகை முழுவதையும் ஒரே சமயத்தில், ஒரே பங்கில் முதலீடு செய்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் காலங்களுக்கேற்ப நிறுவனங்களின் செயற்பாடுகளிலும் அதன் இலாப மீட்டும் தன்மையிலும் ஏற்ற இறக்கம் ஏற்படக்கூடியதாகையினால் (Cycling Impact), வெவ்வேறுபட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் பங்கில் முதலீடு செய்வது மிகவும் முக்கியமானதாகும். இதுவே Diversified Portfolio எனப்படும்.

கையிலுள்ள முழுத்தொகையினையும் முதலீடு செய்யக்கூடாது. ஏனெனில் அப்பங்கின் வாங்கிய விலையைவிட நடப்புவிலை குறைவடைந்தால், கையில் மிகுதியாக இருக்கும் பணத்தில் மேலும் ஒரு பகுதியின் மூலம் அப்பங்கினை நடப்பு (குறைந்த) விலையினில் கொள்வனவு செய்வதன் மூலம் அப்பங்கிற்கான மொத்த விலையினைக் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் (Reduce the Overall Cost of the particular Share).

### வேறு எவ்வகையான அனுகூலங்கள் பெறமுடியும்?

உபகாரப் பங்கிற்கு உரித்தாதல்.

இலாபப் பங்கு பெறுதல்.

உரிமை அல்லது உரித்து வழங்குதல்.

விரைவாகப் பணவடிவில் மாற்றுவதற்கான இயலுமை. (திரவத்தன்மை- Liquidity)

பிணைப்பாதுகாப்பு எனும் வகையில் சமர்ப்பிக்க முடியும்.

“இயக்குனர் குழுவில்” (Board of Directors) ஒருவராகப் பதவி வகிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

தீர்மானங்கள் எடுக்கும்பொழுது தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை இருக்கும். (In Annual General Meeting - AGM)

பின்வரும் செயற்பாடுகள் பங்குச்சந்தை நடவடிக்கைகளில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றன.

அந்நிய நேரடி முதலீட்டு நடவடிக்கைகள் ( FDI – Foreign Direct Investment activity)

உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு (Local Investors participation) நிறுவன நடவடிக்கைகள் (Institutional Investors Participation)

நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை (Political situation of the country)

வைப்புகளுக்கான வங்கி வட்டி வீதமாற்றங்கள் (Deposit Interest Rate movements)

பணவீக்கம் (Inflation)

மசகு எண்ணையின் விலை மாற்றங்கள் (Crude Oil Price movement)

மேற்குறிப்பிட்டவை மட்டுமன்றி நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பு, வெளிநாட்டுடன் தொடர்புடைய மாற்றங்கள், நாடு மற்றும் உலக பொருளாதார ஸ்திரத்தன்மை, திடீர் மாற்றங்கள் (Unexpected Events), உலக வங்கி போன்ற பாரிய நிதி வழங்குனர்களின் கொள்கை செயற்திட்ட மாற்றங்கள் போன்றவையும் முக்கிய இடத்தினை பெறுகின்றன.

பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களின் போது நாம் அவதானிக்கக் கூடிய விலை சுட்டெண்களாக அனைத்து பங்கு விலை சுட்டெண் (All Share Price Index - ASPI) மற்றும் S&P Sri Lanka 20 Index போன்ற இரண்டு சுட்டெண்களும் அங்கம் வகிக்கின்றது.

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
26.02.2023



- தமிழ்க்கவி -

எங்கள் வாழ்வும் வளமும்

# காலம் தந்த செல்வம்

> "சுத்தமாக எமது மண்ணில் உள்ள வளங்கள் எதையும் நாம் தேடவில்லை. அவற்றை அழிய விட்டுவிட்டு கடைகளில் கவர்ச்சிகரமாக பைக்கற்றுக்களில் அடைத்து வரும் பொருட்களுக்காக உழைக்கிறோம். முன்னே அனுப்பும் கப்பலில் நோயையும், பின்னேவரும் கப்பலில் மருந்தையும் இறக்கி அனுபவிக்கிறோம்."

பூக்கள் பூக்கும் காலம். காய்கள் காய்க்கும் காலம். பழக்காலம், இவைகடந்து வரும் தூக்கக் காலம். வெறுமனே சேமிப்பிலிருந்து சாப்பிட்டுக் கொண்டு, வெளியே சுற்ற முடியாமல் வீட்டுக்குள் முடங்கியிருக்கும் காலம். இந்தக்காலத்தில் மழை வெள்ளம் பனி என்பன மிகையாக விளங்கும்.

காட்டு மரங்களுக்கும் தைமாசியில் பூக்கும் காலம். பாலை,வீரை, பனிச்சை, பயறி, வெடுக்குநாறி, கருங்காலி, காஞ்சிரை, போன்ற மரங்கள் இப்போது பூக்கும். கூழா விளா நாவல் போன்றவை சித்திரை முடியப்பூக்கும். அவை பிந்திப் பழுக்கும். வைகாசி பிறந்தால் சந்தைகள் மணக்கும். பலாப்பழம், மாம்பழம், அன்னாசிப்பழம். போன்ற ஒழித்து வைக்க முடியாத பழங்கள் பழுக்கத் தொடங்கும். இவை இருக்குமிடத்தை அதனதன் வாசமே காட்டிக் கொடுத்துவிடும். இவற்றைச் சாப்பிட்டுவிட்டு வருபவரிடம்கூட வாசனை இருக்கும். வாழைப்பழத்துக்கு பருவகாலம் கிடையாது. அது வருடம் முழுவதும் காய்க்கும். பழுக்கும். கொய்யாவும் எலுமிச்சையும் மாதுளையும்கூட அப்படித்தான். இந்த மூன்று வகை மரங்களுக்கும் அதிகமான நீர் விடுவதில்லை. அவை கொஞ்சம் வரட்சியில் நிற்பதே பழங்களுக்கு சிறப்பு. மாமரமும் பலா மரமும் தை,மாசியிலும் ஆடிமாதத்திலும் பூக்கும். பலாமரம் பூப்பதில்லை என்றால் தவறு. அதன் பூக்கள் மரத்தின் நுனிக் கொம்பரில் சிறு பிஞ்சுகள் போல பிடிக்கும். அவை வந்தபின்தான் மரத்தில் பிஞ்சுகள் தோன்றும். மாமரத்தின் முழு பாகங்களும் மனிதர்களுக்கு பயன்படுகின்றன.

இந்தப் பூக்கள் பூக்கும் காலம் வெயில் ஆரம்பிக்கும். புழுக்க காலம் தொடங்கும். இக்காலம்தான் தேன் எடுக்கும் காலம். எப்போதும் பூக்கள் இருக்குமிடங்களில் வண்டுகளின் ரீங்காரம் கேட்டுக் கொண்டே இருக்கும். காடுகளில் தேன் சேகரிக்கும் காலம் மாசி முதல் சித்திரை முடியவும், வைகாசி சில நாட்களுக்கு இருக்கும். புழுக்க காலம் முடிந்து வைகாசியில் சோழகக் காற்று வீசத் தொடங்கிவிடும். காற்றெழும்பியபின் வண்டுகள் தேனெடுக்கப் போக முடிவதில்லை. பெருங்காற்று அவைகளைப் பறக்க விடாது. அத்துடன் பூக்களும் உதிர்ந்து பிஞ்சு கட்டிவிடும். இந்த மாதங்களுக்குள் இயன்ற அளவு தேனை சேகரித்து சுரைக்குடுவைகளில் சேர்த்து வைப்பது அந்தக்காலம். இப்போது கண்ணாடிப் போத்தல்களில் சேர்க்கிறார்கள். இந்த தேன் எமது அன்றாட உணவுகளில் எப்படியும் சேர்க்கப்படும். தினைமாவில் தேனூற்றிப் பிசைந்து சாப்பிடுவோம் ரொட்டிசுட்டால் தேனுடன் சாப்பிடுவோம், வெள்ளரிப் பழம், விளாம்பழம் பலாப்பழம் என்பவற்றையும் தேனில் தொட்டுத் தின்போம்.

அதிகமான நாட்டு மருந்துகளை தேனில் குழைத்து தின்னச் சொல்வார்கள். சில காலங்களில் நெய்யிலோ பாலிலோ கலந்து தின்னச் சொல்வார்கள். இவை இரண்டுயும் ஒரே நேரத்தில் கொடுப்பதில்லை. அதனால்தான் ஆநெய்க்கு ஒரு காலம் என்றால், பூநெய்க்கு ஒரு காலம் என்று சொல்வார்கள். ஆ.என்றால் பசு. ஆவின் நெய்க்கு ஒரு காலம். பூவின்நெய்

தேன். தேனுக்கு ஒரு காலம் எனச் சொல்வர். தேனின் சுவை மாறுபடும். மாம்பூ வேப்பம்பூ ஆகியவற்றின் தேனில் அற்புதமான வாசனையும் சுவையும் உண்டு. பாலைப்பூவின் தேனுக்கும் காஞ்சிரம் பூத் தேனுக்கும் சுவை வேறுபடும். காஞ்சிரை பொல்லாத நஞ்சுதான். ஆனால் தேனில் சிறிது கசப்பு தென்பட்டாலும் அது அருமருந்தாக பயன்படும். தேனீக்கள் எடுக்கும் தேனில் அவற்றின் எச்சில் கலந்து ஏற்படும் இரசாயன மாற்றம் அது.

தேனீ வளஉப்பது இப்போது சகஜமாகி வருகிறது என்றாலும் சுத்தமான காட்டுத் தேனுக்கு நிகர் எதுவுமில்லை. காட்டில் பலவகையான பூக்களிலிருந்து தேனை



எடுக்கும் தேனீக்களுக்கு மரப் பொந்துகள் வாகான கிளைகள், பாறை இடுக்குகள் என்பன குடியிருக்க தோதானவையாகும். அடைத்து வளர்க்கும் தேனீக்களுக்கு செயற்கை உணவு வகைளை அளிப்பதும் வழக்கமாகும். அவற்றில் நாம் மருத்துவ குணங்களை எப்படி எதிர்பார்க்கமுடியும். சாதாரணமாக வயிற்றோட்டம், இருமல், என்றாலே தேனை வீட்டுவைத்தியத்தில் சேர்த்துவிடுவோம். அது பாட்டி சொன்ன மருத்துவம். இன்றைக்கும் பெருங்காடுகளை அண்டி வாழும் பலருக்கு தேன் எடுக்கும் காலம் ஒரு வருமானத்தை தரும் காலமாக இருக்கிறது.

பூக்கள் பிஞ்சாகிவிட்டால் தேன் மறைந்து விடும் ஆனால் பிஞ்சுகளில் சுவை காணும் மரபு போகுமா? பனையின் பிஞ்சு நுங்காகி பங்குனி வெய்யில்கடந்து வரும் வேர்க்குரு, வேனல் கட்டிகளுக்கும் மருந்தாகும்.மாமரம் பிஞ்ச கட்ட காற்றுக்காலமும் தொடங்கும் வகை தொகையாக மாம்பிஞ்சுகள் விழும் அது வீணாவதில்லை. மாவடு செய்யவும் அவற்றைக்கீறி ஊறுகாய் போடவும் வற்றல் போடவும் வீடுகளில் பாட்டிகள் இருப்பார்கள். பலாக்காயிலும், மூசு பருவத்தில் அதை கறியாகவும, இன்னும் சற்றுப் பெருத்துவிட்டால் பொலஸ்கா என்ற சிங்கஎப் பெயரில் வறுவல் செய்யவும், முற்றிய பின்னும், கறி காய்ச்ச முடியும் அதாவது காற்றில் அடிபட்டு விழுந்தாலும் பயன்படும்.

இதே வைகாசியில் பாலைமரங்கள் பழுத்துச் சொரியும். வீரைமரங்களும் பழுக்கும். இலுப்பை மரங்களும் பூச் சொரியும். பாலைப்பழங்கள்மிகையாகக் கிடைத்தால் அதை கரைத்த பாணியாக காய்ச்சி போத்தல்களில் பதப்படுத்தி வைப்பர் பழுப்பாகு செய்ய சீனி வேண்டும் இதற்கு சீனி தேவையில்லை. பலமாதங்களுக்கு கெடாமல் இருக்கும். இதேவகையில் உலுவிந்தம்பாணி உலுவிந்தம் பழத்திலும் செய்யலாம். இலுப்பைப்பூக்களை மரத்தின்கீழ் சேலைகளை விரித்து வைத்து காலையில் விழுந்த பூக்களை கடகப் பெட்டிகளில் அள்ளி வருவோம். அதை வெய்யிலில் காயப் போடுவோம். நான்கு தினங்களில் காய்ந்த திராட்சை போல சுருங்கிவிடும். அதிலுள்ள இனிப்பு கைகளை பிசுபிசுக்கச் செய்யும். இந்த வற்றலை உரலில் இட்டு இடித்து மிளகு சீரகம் சேர்த்து உருண்டையாக்கி சேமிக்கலாம். அதே இடித்த திரட்சியை நீர்விட்டு காய்ச்சி வடித்து பாணியாகும் வரை காய்ச்சி இலுப்பைபூப்பாணியும் செய்யலாம். இலுப்பைப்பாணி வயிற்றில் விளையும் கட்டிகளை கரைக்க வல்லது. சீனிக்குப் பதிலாக எந்த உணவிலும் கலக்கலாம்.

இனிப்பு என்பதைவிடப் புளிப்பும் நமக்குத் தேவை. உணவில் சுவைக்காக மட்டுமல்ல புளியும் எமது உணவில் இருப்பது செமிபாட்டை சிறப்பாக்கும் என்பர். எமது உணவில் புளி சேர்க்காமல் விட்டால் கைகால்களில் குத்து உளைவு ஏற்படும் என என் பாட்டி சொல்வாள். புளிக்காக ஊரிலுள்ள புளியமரங்களை மட்டும் நம்பியிராமல் போட்டு வைத்த மாங்காய் வற்றல் மரத்தில் மாங்காய் இருக்கும் வரையும் பலவகைக் கறிகளில் சேர்ப்பது வழக்கம். காட்டுப் பழமான கூழா குலை குலையாக காய்க்கும். இதிலும் கடும்புளி, புளிப்பும் இனிப்பும் கலந்தது. என பல்வேறு சுவை இருக்கும் இந்த மரங்கள் நிறைந்த பழங்களை தரும்போது பெருமளவில் கொண்டுவந்து ஆளும்பேருமாக கூடியிருந்து அவற்றை கோது நீக்கி மண்சட்டியில் போட்டுக்கடைந்து விதைகளை நீக்கிவிட்டு. அடுப்பிலிட்டுக் காய்ச்சி பாணியாக்கி நீண்ட நாட்கள் தேவைக்குப் பயன்படுத்தலாம். எல்லாவித கறிகளுக்கும் பொருத்தமாக இருக்கும்

வீடுகளில் துணிமணி வாங்கவும் சோப் வாங்கவும் மட்டுமே பணம் தேவைப்படும. ஏனைய எல்லாமே சேமிப்பிலிருக்கும். தேவையற்ற எந்தப் பொருளையும் நாம் வாங்குவதில்லை. எமது வாழ்க்கையை உலக மயமாக்கலுக்குள் அடகு வைக்கும்வரை எமக்கு இப்படி பெரிய செலவுகளோ கடன்களோ இருந்ததில்லை. இன்றைக்கு ஊர்தெருக்களிலும் குளப்பரப்புகளிலும் நிற்கும் புளியமரத்தை யாரும் சீண்டுவதில்லை. கடைப்புளி தான். நான் குறிப்பிட்ட பாணிவகையும் கிடையாது. வன்னிக்காடுகளில் இராணுவம் குடியேறியதால் பாலைப்பழங்களை நாம் இழந்து விட்டோம். காடுகளுக்கு சென்று சேகரிக்க முடியாவிட்டாலும் அதைத் தொழிலாக செய்து பழம் விற்பவர்கள் கூட இப்போது காட்டுக்கு போக முடியாது. இலுப்பைப்பூக்கள் வட்டக்கச்சி வாய்க்கால் நீரோடு ஓடி வயலுக்குள் வீழ்ந்து பாழாகிப் போவதைக் கண்டேன். இலுப்பைமரம் பற்றி இன்னும் தகவல் உண்டு. அதை பின்னர் பார்க்கலாம். பலாக்காயை கறி சமைக்க தமிழ்ப் பெண்களுக்கு அலுக்கிறது. அட எதற்கு நிறைய இப்போதெல்லாம் பெண்கள் சமைப்பதற்கு தெரிந்தவர்களும் கூட ஒன்லைனில் ஓடர் போட்டு சாப்பிடுவதைக் காண்கிறோம். தேனை உற்பத்தி செய்கிறார்களாம் தேனீ இல்லாமலே. ஒரு சிறுமியிடம் அப்பா என்ன வேலை செய்கிறார் என்று கேட்டதற்கு அவள், அவர் தேன் காய்ச்சி விற்கிறார் என்றாள்.



சுத்தமாக எமது மண்ணில் உள்ள வளங்கள் எதையும் நாம் தேட வில்லை. அவற்றை அழிய விட்டுவிட்டு கடைகளில் கவர்ச்சிகரமாக பைக்கற்றுகளில் அடைத்து வரும் பொருட் களுக்காக உழைக்கிறோம். முன்னே அனுப்பும் கப்பலில் நோயையும், பின்னே வரும் கப்பலில் மருந்தையும் இறக்கி அனுபவிக்கிறோம். *




# "விடாமுயற்சியே மூலதனம்"

# முன்னேறிவரும் வெற்றிப்பெண்

**செல்வராசா வசந்தகுமாரி, கிளிநொச்சி, முழங்காவில் பிரதேசத்தில் இருக்கும் குமுழமுனை எனும் கிராமத்தில் வசிக்கிறார். 2009 இறுதி யுத்தத்தின்போது பல இன்னல்களைச் சந்தித்த அவர் பல தடைகளைத் தாண்டி தனக்கென ஒரு தனி அத்தியாயத்தை பதித்துள்ளார். அதுதான் எபினேசர் தும்புத் தொழிற்சாலை. சுய தொழில் முனைவோருக்கான பல விருதுகளை வென்றவர் செல்வராசா வசந்தகுமாரி. தமிழர் பொருண்மியம் வார இதழுக்காக இவரைச் சந்தித்த போது தன்னுடைய அனுபங்களை அவர் பகிர்ந்துகொண்டார்.**

**கேள்வி:-** தனி ஒரு மனுஷியான வசந்த குமாரி ஒரு தொழிற்சாலையின் அதிபர் ஆனது எப்படி?

**பதில்:-** 2009 ஆம் ஆண்டு வரை


எபினேசர் தும்புத் தொழிற்சாலை. ஸ்தாபகர் செல்வராசா வசந்தகுமாரி

எனது வாழ்க்கை இயல்பாகத்தான் சென்று கொண்டிருந்தது... போர் முடிந்து பல இன்னல்களுக்கு பிறகு நான் வீடு வந்த போது எனக்கென்று எதுவுமே இருக்க வில்லை..

எனது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதற்கு பல இடங்களில் வேலைக்கு சென்று இருக்கிறேன்.

2010 செப்டம்பரில் பாடசாலை ஒன்றில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றினேன். பின்னர் தொண்டு நிறுவனம் ஒன்றிலும் பணிபுரிந்தேன்.

கிராமங்கள்தோறும் சென்று, வாழ்வின் அடிமட்டத்தில் இருக்கும் பெண்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிவது எனது பணியாகும்.

கணவனை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட பெண்களை சந்தித்து அவர்களோடு பேசும் வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது. அப்பெண்களின் வாழ்வில் ஒளியேற்ற ஏதாவது செய்தாக வேண்டும் என முடிவெடுத்து எனது தும்பு தொழிற்சாலையை சிறிய அளவில் ஆரம்பித்தேன்.

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

**கேள்வி:-** இந்த தொழில் தொடர்பான பயிற்சிகளை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:-** ஏற்கனவே தும்புத் தொழிற்சாலை ஒன்றின் தொழில்நுட்ப பிரிவில் கடமையாற்றிய அனுபவம் எனக்கு கை கொடுத்தது. அதனைக் கொண்டு மேலும் பலவற்றை தெரிந்து கொள்ள முயற்சித்தேன். அத்தோடு கிறிஸ்டலிஸ் நிறுவனமும் தும்பிலிருந்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகளை மக்களுக்கு வழங்கியிருந்தது.

**கேள்வி:-** உங்களது தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்களை நீங்கள் எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:** வங்கி கடன்களும் எனது முயற்சியுமே மூலதனமாக அமைந்தது, பின்னர் எனது கடுமையான உழைப்பை பார்த்து சில அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் சிலரும் மனப்பூர்வமாக உதவி செய்தனர்.

**கேள்வி:-** தற்போது உங்களது தொழில் கூடத்தில் எவ்வகையானவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகிறீர்கள்?

**பதில்:-** ஆரம்பத்தில் ஒன்று இரண்டு பேருக்கே என்னால் வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய தாக இருந்தது. இப்போது





15 தொடக்கம் 17 வரையான பெண்கள் நமது நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களாகவும் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளர்.

**கேள்வி:-** உங்களது உற்பத்திக்கான மூலப்பொருட்களை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?

**பதில்:-** அயல் கிராமங்களிலும் அண்டியுள்ள பிரதேசங்களிலும் தேங்காய் மட்டைகளைக் கொள்வனவு செய்கிறேன். அதிகமான மக்கள் தாம் விரயப்படுத்தும் தேங்காய் மட்டைகளை என்னிடம் தந்து பணமாக்கிக் கொள்கின்றனர்.

**கேள்வி:-** உங்களது உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?

**பதில்:-** இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு முன்பு தென்னிலங்கையில் இருந்து நமது பொருட்களைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் முன்வந்தனர். ஆனால் இப்போது சந்தைப்படுத்தலில் நாம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளோம். பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு மூன்று மடங்கு அதிகமாக விலை கொடுக்க வேண்டி இருக்கிறது. அதனால் எமது உற்பத்தி பொருட்கள் களஞ்சியங்களில் தேங்கிப்போய் இருக்கின்றன. ஆனால் நாங்கள் சோர்ந்து விடாமல் மாற்று வழிகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:-** எவ்வகையான மாற்று வழிகளை கையாள்கிறீர்கள்?

**பதில்:-** ஏற்றுமதி செய்ய முடியாதபடி களஞ்சியங்களில் பாதுகாக்கப்பட்டு இருக்கின்ற தும்புகளில் இருந்து கால் மிதிகளையும் இதர பொருட்களையும் செய்வதற்குத் தயாராகின்றோம். அத்தோடு எமது பணியாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பை கொடுக்கக் கூடிய வகையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றோம்.

**கேள்வி:-** சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் ஏனையவருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

**பதில்:-** ஒரு தொழிலைத் தொடங்கும் போது அந்த தொழில் தொடர்பான அறிவு என்பது மிகவும் அவசியம். அவ்வாறு தொழில் தொடர்பான அறிவோ அனுபவமோ இன்றி பெருந்தொகையான முதலீடுகளை செய்கின்றவர்களது தொழில்கள் வீழ்ச்சி அடைந்து விடுகின்றன.

தொழிலோடு சேர்ந்து ஒரு சிறிய சேவை நோக்கமும் நமக்கு இருக்க வேண்டும், மற்றும் எந்தப் பெரிய சவால்களையும் எதிர்கொள்ள கூடிய மனோதிடத்தை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் தான் செய்யும் தொழிலில் நிலைத்திருக்கவும் ஜெயிக்கவும் முடியும். பிறப்பும் இறப்பும் தான் இயற்கையாக நமக்குக் கிடைக்கும். மற்றும் வெற்றிகளை எல்லாம் நமது முயற்சியால் தான் தேடிக் கொள்ள வேண்டும்.

> *“ஆரம்பத்தில் ஒன்று இரண்டு பேருக்கே என்னால் வேலைவாய்ப்பை வழங்கக்கூடியதாக இருந்தது. இப்போது 15 தொடக்கம் 17 வரையான பெண்கள் நமது நிறுவனத்தில் பணிபுரிகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களாகவும் பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்தவர்களாகவும் உள்ளனர்.”*



# இல்லத்தரசிகளின் எண்ணங்களுக்கு வண்ணம் கொடுப்போம்...



வீட்டுப் பொருளாதாரம்

ஞா.கவி

கனவுகளை துரத்தும் நெடும் பயணத்தில் ஒவ்வொரு பெண்ணும் சாதிக்க முடியும் என்பதை சொல்கிறது இந்த கதை.

ஊரடங்கு சமயத்தில் வீட்டில் ஹாயாக செல்போன் மற்றும் தொலைக்காட்சி என பொழுதைப் போக்காமல், சிற்பிகள் மற்றும் கடதாசிகளில் அலங்கார நகைகள் செய்து தனது நண்பர்களுக்கு அன்பளிப்பு செய்து வந்தவர் தற்போது அத்தொழிலின் மூலம் லட்சக் கணக்கில் சம்பாதித்து வருகிறார்.

பேஷன் டிசைனிங் துறையில் ஆர்வம் இருந்தாலும் திருமணத் திற்கு பிறகான தருணங்கள் அவரை அத்துறையில் ஈடுபடுவதற்கு இடம் அளிக்கவில்லை.. கணவன் பிள்ளைகள் என்று தனக்கென ஒரு வட்டத்தை அமைத்து வைத்திருந்த நிர்மலா, கிடைத்த நேரத்தில் தன் கனவுகளுக்கான சிறகை விரித்தாள்.

கனவுகளுக்கு படிப்போ அல்லது சூழ்நிலையோ என்றுமே தடையாக இருந்ததில்லை.

வீட்டில் தானே இருக்கிறேன் என்று அசட்டையாக இருக் கவும் என்னால் முடியவில்லை. குடும்பத்தில் அத்தனை பேருக் கும் தத்தம் பணிகளை தாமே முடிப்பதற்கு பழக்கப்படுத்தி இருப்பதால் இலகுவாக என்னால் இதனை செய்ய முடிகி றது.

இதனை நான் தெரிவு செய்வதற்கான காரணம் ஒன்று ரசனை, அடுத்தது வீட்டிலிருந்தே செய்யக்கூடிய ஒரு தொழில் என்பதனால். ஆரம்பத்தில் எனக்கு விசனமாய் இருந்தாலும் போகப்போக வாடிக்கையாளர்கள் அதிகரித்திருக்கின்றனர் எனது மாலைகளையும் காதணிகளையும், கை வளையல்களையும் பலர் விரும்பி வாங்கி செல்கின்றனர். தமது உறவுகளுக்கும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். எதிர்காலத்தில் இதனை ஒரு நிறுவன மயப்படுத்த வேண்டும் என்றும் விரும்புகிறேன். இதனால் என்னைப் போல வீட்டில் இருந்து சம்பாதிக்க நினைக்கும் பல பெண்களுக்கு என்னால் தொழில் வாய்ப்பையும் கொடுக்க முடியும் பெண்களால் முடியாது என்று எதுவும் இல்லை குடும்பத்தை நடாத்தும் பெண்கள் வியாபா ரத்தையும் தொழில்களையும் மிக இலகுவாக நிர்வகிக்க முடியும் என்கிறார் நிர்மலா.






**யதுகுலா ரஜிதன்**
(ஆராய்ச்சி உதவியாளர்),
பிராந்திய விவசாய ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி நிலையம்,
கிளிநொச்சி.

# உணவுக்காடு ஒன்று அமைத்திடுவோம்

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

**இயற்கையான காடு ஒன்றின் தோற்றம்**

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பில்மொலிசன் என்பவர் நிரந்தர வேளாண்மை தொடர்பான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தினார். நிரந்தர வேளாண்மையில் வேறுபட்ட அடுக்குகளில் பயிர்கள் ஸ்தாபிக்கப் படுகின்றன. இதன் அடிப்படையை கொண்டு இப்பொழுது உணவு காடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண்மை செய்வதற்கு உழவு தேவையில்லை என்று மசானபுஃபுகோகா "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். வேளாண்மை என்பது ஒரு தொழில் அல்ல, அது ஒரு வாழ்வியல் என்ற தத்துவத்தை தன் வாழ்வின் நிகழ்வு, அன்றாடப் பணிகள் வழியே நமக்கு அளித்துள்ளார் ஃபுகோகா.

நாங்கள் எல்லோரும் காடு என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம். பசுமையான ஏராளமான இயற்கையான வனப் பகுதிகள் சாத்தியமான பகுதிகளில் பல் உயிர்களின் செழுமை மற்றும் மரங்கள் செடிகள் கொடிகள் என்பன பின்னிப்பிணைந்து காணப்படும். மனித தலையீடுகள் எதுவும் இன்றி காடுகள் பசுமையாக வளர்கின்றன, அதேபோல தங்களை தாங்களே தக்க வைத்துக் கொள்கின்றன. காடுகள் தனித்தனியாகச் சுயமாக இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அவற்றுக்கு இடையே ஒரு சமநிலை பேணப்படுகிறது. இதனைப் புரிந்துகொள்வதன் மூலம் இயற்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். இங்கே வெட்டுதல், நிலம்படுத்தல், களை எடுத்தல், பூச்சி கொல்லிகள் தெளித்தல், இரசாயன உரங்களின் பாவனை போன்ற எந்த தேவையும் இல்லை. அதே வேளை வேலையாட்களின் தலையீடுகளும்இல்லை. ஆரோக்கியமான காடுகளுக்கு களையெடுக்கவோ உரமிடவோ மனிதர்கள் தேவையில்லை.



பொதுவாக நாம் ஒரு பயிர் செய்யும் இடத்தைப் பார்வையிடும் பொழுது காடு போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். நிஜத்தில் பயிர்ச்செய்கை அல்லது தோட்டம் என்பது காடுகளுக்கு நேர் எதிரானது. வரலாறு முழுவதும் பயிர் செய்கைகளை மேற்கொள்வதற்காகக் காடுகளை அழித்து அல்லது அகற்றி வருகின்றோம். ஆனால் வனத் தோட்டம் அல்லது உணவு காடு மூலம் காடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இயற்கையோடு இணைந்து செயல்படுவதன் மூலம் உண்மையில் நாம் நிறையப் பெற முடியும் என்பது தெரியவந்துள்ளது. இயற்கையான காடுகளில் இருந்து, நாம் உருவாக்கும் உணவுக் காட்டுக்கான மாதிரி அமைப்புகளை நகல் எடுத்துக் கொள்ளலாம். நிஜத்தில் காட்டில் இருந்து நமக்குத் தேவையான உணவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கும். இப்படி ஒரு காட்டை நாம் உருவாக்கும்





போது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்? நிச்சயமாக இப்படியான ஒரு காட்டில் இருந்து மிகவும் போஷனை யான, பாதுகாப்பான, சுவையான, பல்வேறு வகையான உணவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்படியான ஓர் உணவு காட்டில் இருந்து நாம் நிலையான உணவு உற் பத்திகளை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ள முடியும். நிஜ வாழ்க்கையில் இது சாத்தி யமா என்று உங்களுக்கு சந்தேகம் இருக் கலாம். ஆனால் அது சாத்தியம்தான் ஏனெனில் உலகளாவிய ரீதியில் இவ்வா றான காடுகளை உருவாக்கி அதிலிருந்து பயன்பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள். அனேகமான நாடுகளில் இவை பின்பற்றப் படுகின்றன. இவை அனைத்தும் எவ்வாறு செயல்படுகின்றன? இதில் என்னென்ன நன்மைகள் உள்ளன? வழமையான வணிக விவசாய முறைகளை விட இது அதிக உற்பத்தியைத் தருகிறதா அல்லது குறைவாக உள்ளதா செலவு குறைந்ததா என்ற யோசனைகள் உங்களுக்குள் இருக்கும் இந்த கட்டுரையில் அதைப் பற்றித் தெளிவாகப் பார்ப்போம்.

இங்கிலாந்தில் வனத் தோட்டக்கலை முன்னோடியான ராபர்ட் ஹார்ட் வனத் தோட்டம் பற்றிய பார்வையை கொண்டி ருந்தார். மனித தலையீட்டினால் உருவாக் கப்படும் காடுகளைப் பொறுத்தவரை பல படி சாகுபடி, நிரந்தர வேளாண்மை, உணவு காடு, மியாவாகி காடுகள் ஆகிய உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பல அடுக்கு சாகுபடி, நிரந்தர வேளாண்மை, உணவு காடு ஆகியன ஒரே கருத்தில் உருவாக்கப்பட் டவை. ஆனால் மியாவாகி காடுகள் இதி லிருந்து வேறுபட்டன. மியாவாகி காடுக ளில் மரங்கள் அடர் முறையில் நடவு செய் யப்பட்டிருக்கும்.

### உணவுக் காடு என்றால் என்ன?

உணவுக் காடுகள் உருவாக்கம் அல் லது கருத்து நிரந்தரவளர்ப்பு (permaculture), விவசாயம், சூழலியல், உயிரியல் மற்றும் பிற இயற்கை வாழ்க்கை அறிவியல் துறை களில் இருந்து ஒருங்கிணைத்து எடுக்கப் படுகின்றன. இத்துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஓர் உயிர் உள்ள தொகு தியையும் மற்றும் நடைமுறைகளை யும் உருவாக்குகின்றன. இதன் மூலம் வேறு பட்ட அளவுகளில் தோட்ட வடிவமைப்பை உருவாக்க முடியும். பல்வேறுபட்ட வாழ்க்கை சமூகத்தை ஒரு சிறிய இடத்தில் வளர்க்க முடியும், இது நகர்ப்புறச் சூழலுக்கு ஏற்றது. இது ஒரு சிறிய சூழல் தொகுதியை உருவாக்கும். அடிசில் சோலை, அணி நிழற் காடு, வனத்தோட்டம், உணவு காடு என வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன.

### உணவுக் காடு ஒன்றின் மேற்பக்கத் தோற்றம்

நாளாந்தம் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு மார்க்கம். குறைந்த அளவு பராமரிப்புடன் எவ்வாறு பயிர்களை வளர்ப்பது என்பது தொடர் பான ஓர் விடயமாகும். இதில் பல்வேறு பட்ட பயிர் வகைகளை அல்லது தாவரங் களை ஸ்தாபிக்க முடியும். முக்கி யமாக உணவு தேவைக்காக பயன்படுத்தப்படும் பயிர்களை தாவரங்களை ஸ்தாபித்தல். பல அடுக்குகளில் தாவரங்களை நடுகை செய்வதன் மூலம் வழமையான பராம ரிப்புகள் எதுவும் தேவையற்ற பயிர்கள், தாமே வளர்ந்து தமக்குத் தேவையான சத்துக்களை ஒரு சமச்சீர் சமநிலையில் பெற்றுக் கொண்டிருக்கும். இதனால் நல்ல உற்பத்திகளும் கிடைத்துக் கொண்டிருக் கும், பராமரிப்பு எதுவும் தேவையில்லை. காடுகளின் இந்த அடுக்குகள் அனைத் தும் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன, ஒவ்வொன்றும் போதுமான சூரிய ஒளி யில் அமைந்துள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து, உற்பத்தித் திறன், குறைந்த பராமரிப்பு மற்றும் ஒப் பீட்டளவில் சுய-பராமரிப்பு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகின்றன. நிமிர்ந்து பார்த்தால் வானம் தெரியக்கூடாது குனிந்து பார்த்தால் நிலம் தெரியக்கூடாது இவ்வாறு இருக்கும் ஒரு இடம்தான் காடு. ஏனென் றால் மரங்களின் விதானங்கள் மூடி இருப் பதனால் வானம் தெரியாது, கீழே நிலங் களில் கொடிகளும் வேறு சிறு தாவரங்க ளும் புல்லுகளும் படர்ந்து இருப்பதனால் நிலம் தெரியாது.

### உணவுக் காட்டில் உள்ளடங்கும் பயிர் வகைகள் எவை?

உணவு காட்டைப் பொறுத்த வரைக்கும் நமக்கு தேவையான அனைத்து பயிர் வகைகளையும் நாம் உள்ளடக்கலாம். அது எமது தேவையைப் பொறுத்து வேறு படும். உணவுக் காடு ஒன்றை அமைக்க விரும்புபவர்கள் சொந்த அமைப்பை உரு வாக்க, அவர்களுக்கு பிடித்த நாட்டு மரங் கள், பழப் பயிர்கள் தானியங்கள், பருப்பு வகைகள், கீரை வகைகள் மற்றும் மூலி கைகள் ஆகியவற்றை தேர்ந்தெடுத்து பயி ரிட முடியும். இங்கே நாம் வணிக ரீதியி லான மரங்கள் அதாவது தேக்கு, பாலை, முதிரை, கருங்காலி, சந்தனம் போன்ற மரங்கள், பழ மரங்களான வாழை, மா, பலா, நாவல், நெல்லி, விளாத்தி, பப்பாளி, கொய்யா, அன்னாசி போன்றவையை உள்ளடக்க முடியும். உருவாக்குபவர்களின் விருப்பத்தை பொறுத்து பயிர்கள் அல்லது தாவரங்களைத் தேர்வு செய்யமுடியும்.

ஒரு உதாரணம், உணவு காடுகளில் உயரமான மர அடுக்காக மா, பலா, நாவல், நெல்லி போன்ற பழ மரங்கள். விதானப்படைக்கு அடுத்ததாக கீழே கொய்யா, மாதுளை, தோடை, தேசி வள ரும். இதற்கு அடுத்தபடியாக புதர்கள் வாழை, பப்பாசி, முருங்கை போன்ற பயிர் கள் அடுத்து செடிகள் அல்லது மூலிகைகள் கத்தரி, மிளகாய், வெண்டைக்காய் போன்ற பயிர்கள், இதற்கடுத்து மூடாக்கு பயிர்கள் (சிறு கீரை வகைகள்), கிழங்கு வகைகள், கொடிகள் வளர்க்க முடியும். ஒவ்வொரு வகையான பயிர் அல்லது தாவரங்களின் வேரின் அமைப்பு வேறுபடும், வேரின் ஆழம் வேறுபட்ட அளவில் காணப்படும். அத்தோடு அவற்றின் உயரங்களும் வேறுபடும். வேறுபட்ட ஆழங்களில் வேர் ஊடுருவுவதனால் நீர் மற்றும் போஷ னைக்கான போட்டித் தன்மை குறைவ டையும். இதனை வைத்துக் கொண்டே நாம் அடுக்கடுக்காக மரங்களைத் தெரிவு செய்கிறோம். இங்கு சூரிய வெளிச்சத்துக் கான போட்டியும், நீர் பசளைக்கான போட்டி

யும் குறைக்கப்படும். சூரிய வெளிச்சம் அதிகமாகத் தேவைப்படும் மரங்கள் உயர மாகவும் குறைந்த அளவில் தேவைப்படும் பயிர்கள் நிலத்தோடும் வளர்ந்து காணப் படும். மிகவும் உயரமான மரங்களுக்கு இடையில் போதிய அளவு இடைவெளி விட்டு ஸ்தாபிக்க வேண்டும். உயரமான மரங்களை விட இன்னும் அதிக உயரமாக நெட்டை தென்னை மரங்களை வைத்து இன்னொரு அடுக்கு அதிகரிக்க முடியும். மூங்கில் மரங்களைக் காட்டின் ஓரத்தில் வைப்பதன் மூலம் காற்றுத் தடை உருவாக் கலாம். காட்டின் வெளிப்புறத்தில் வணிக மரங்களையும் (தேக்கு, பாலை, கருங் காலி, முதிரை, வேம்பு, மகோகனி) ஸ்தா பிக்க முடியும்.

**ஏழு அடுக்குக் கொண்ட ஓர் உணவு காடு மாதிரி**

உற்பத்தி மரங்கள் ஆதார மரங்கள் என இணைத்து நடவு செய்ய வேண்டும். ஆதாரங்கள் எனும்போது நைட்ரஜனை பதிக்கக்கூடிய கொன்றை, வாகை, சீமைக் கிழுவை போன்ற மரங்களை உற்பத்தி மரங்களுடன் இணைத்து நடுகை செய்ய வேண்டும். உணவுக் காட்டை பொறுத்த வரை நிச்சயமாக நாட்டு ரகங்களையே பாவிக்க வேண்டும். ஏனெனில் இங்கு ரசாயனஉரம், பூச்சிக்கொல்லிகள் எவற்றை யும் பயன்படுத்துவதில்லை. பயிர்களின் தெரி வுகளைப் பொறுத்தவரை பிரதேசத் துக்கு ஏற்புடையதாக அல்லது அந்த பிர தேசத்தின் காலநிலைக்கு ஏற்ப தெரிவு செய்ய முடியும்.

உணவுக்காடு ஸ்தாபித்து ஆரம்பத்தில் மூன்று தொடக்கம் 5 வருடங்கள் வரை நீர் முகாமைத்துவம் மேற்கொள்ள வேண் டும். இதற்கு துளி நீர்ப்பாசனத்தை பயன்படுத் தலாம். காடுகள் உருவாகிய பின் அவை தமக்குள்ளேயே சமநிலையை ஏற்படுத்தி கொள்ளும்.

**எவ்வளவு இடப்பரப்பில் உணவுக் காட்டை அமைக்க முடியும்?**

குறைந்தது ஒரு பரப்பு காணி இருப்பின் கூட நாம் உணவு காட்டை ஸ்தாபிக்கலாம். இடப்பரப்பு கூடிய அளவு இருக்கும் பட்சத் தில் நாம் அதிகளவான பயிர் வகைகளை ஸ்தாபிக்க முடியும். இடப்பரப்பு அதிகமாக இருக்கும் பொழுது அதிகளவான வணிக மரங்களையும் மற்றும் வெவ்வேறு வகை யான பழமரங்களை தேர்வு செய்து நாட்ட முடியும்.

**உணவு காடுகளை வடிவமைக்கும் பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

சூரியனின் இயக்கம்

காற்று வீசும் திசை என்ன மற்றும் பருவங்கள் எவை?

மழை எங்கிருந்து வருகிறது? எப்பரு வத்தில் மழை பெய்கிறது?

மனித செயல்பாட்டின் முக்கிய பகுதி கள் யாவை?

திட்டமிடப்பட்ட பகுதி முழுவதும் மனி தர்களின் விலங்குகளின் நடமாட்டம் எவ் வாறு உள்ளது.

நீருக்கான தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படப் போகின்றது அதாவது நீர்வளம் அப்பகுதியில் எவ்வாறு உள்ளது

காடமைக்கத் திட்டமிட்டுள்ள பகுதியில் நீர் எவ்வாறு செல்கிறது?

அந்தப் பகுதியில் உள்ள மண் வகை எவ்வாறு உள்ளது?

பகுதி சமாந்தரமானதா? அல்லது ஏதே னும் சரிவுகள் உள்ளதா? என்பதை அவதா னித்தல்.

**உணவு காட்டை வடிவமைப்பு செய்யும் போது பின்பற்ற வேண்டிய செயல்முறை**

சூழலை அவதானித்தல்.

பொருத்தமான இடத்தைத் தெரிவு செய் தெடுத்தல்.

தளவமைப்பு இணைப்புகள்.

தெரிவு செய்யப்பட்ட சூழல் தொகுதி தொடர்பான விபரங்கள் மற்றும் தரவுகளை சேகரித்தல்.

இடத்துக்கு பொருத்தப் பாடான மரங்கள் பயிர் வகைகளைத் தேர்ந்தெடுக்கவும்.

விதானங்களுக்கு ஏற்ப பொருத்தமான இடைவெளிகளில் மரங்கள் மற்றும் பயிர் களை ஸ்தாபித்தல் (5-7 அடுக்குகள்).

உயரமான மரங்கள்

நடுத்தரமான மரங்கள்

புதர்கள்

சிறு செடிகள்

மூடாக்குப் பயிர்கள்

கொடிகள்

கிழங்குகள்

உணவுக் காட்டை நிறுவி முதல் மூன்று வருடங்கள் முகாமை செய்ய வேண்டும்.

உணவுக் காடு ஒன்றை நிறுவுவதற் கான நோக்கங்கள்

மழை பொழிவதற்கான சூழலை ஏற் படுத்துதல்.

உணவாதாரத்தையும் பொருளாதா ரத்தையும் மேம்படுத்துதல்.

மழை நீரை இயற்கையாகச் சேமித்து, நிலத்தடி நீரை பாதுகாத்தல்.

உயிர்ப்பல்வகைமையை காத்தல்.

நீர் நில வளம் பேணுதல்.

வனப் பரப்பை அதிகரித்தல்.

உணவுக் காட்டின் நன்மைகள்

உணவுப் பாதுகாப்பு.

இயற்கை சமநிலை பேணப்படும்.

விலங்குகளுக்கான வாழிடம்.

போஷனை மிக்க உணவுகள்.

வருடம் முழுவதும் உணவு.

ஒரு சதுர அலகு நிலப்பரப்பிற்கு அதிக இலாபம்.

நீர் முகாமைத்துவம் பேணப்படும்.

பராமரிப்பு தேவையில்லை.

அதிகளவான உடனடியான பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பெற முடியும்.

வருடம் முழுவதுமே வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். அதாவது தினசரி வருமானம், வார வருமானம், மாதாந்த வருமானம், வருடாந்த வருமானம் ஆக பெற்றுக் கொள்ளலாம்.

சூழலுக்குப் பாதுகாப்பானது. அப்பிரதே சம் மிகவும் குளிர்மையான சூழல் தொகுதி யாக காணப்படும்.

அந்தந்த காலங்களில் வரக்கூடிய பழங் களை பெற்றுக்கொள்ள முடியும்.

மூன்று வருடங்களின் பின் தமக்குள் ஒரு சமநிலையை ஏற்படுத்திக்கொண்டு வருடம் முழுவதும் உற்பத்தியை தந்து கொண்டிருக்கும். மகரந்தச் சேர்க்கையாளர் களின் செயற்பாடு இயல்பாக நடைபெறும்.

நன்மை செய்யும் உயிரினங்கள், பற வைகள் போன்ற தொகுதிகள் இயற்கை யாகவே நிறுவப்படும்.

செலவு குறைவு, அதிகமான வருமானம்.

நோய்ப் பூச்சித் தாக்கங்கள் இல்லை அல்லது குறைவு.

மரங்களின் இலைகள் நிலத்தில் வீழ் வதால் அது இயற்கையான உரம் ஆகிறது மற்றும் மூடாக்காக தொழிற்பட்டு நீர் ஆவி யாவதைத் தடுக்கும். இதன் மூலம் ஈரப்ப தன் பேணப்படும்.

**பொருளாதார வாய்ப்புக்கள்**

இயற்கை வழி உணவு உற்பத்தி மற் றும் விற்பனை.

உணவுக் காடு தொடர்பான ஆலோ சனை, வடிவமைப்பு, நிறுவுதல் மற்றும் முகாமைத்துவம்.

ஊட்டம் ஏற்றப்பட்ட உற்பத்தி பொருட்கள்.

மருத்துவ உற்பத்தி பொருட்கள். காட்டி லிருந்து வீட்டிற்க்கான உணவுகள்.

சுற்றுலா தளம்.

உணவுக் காடு தொடர்பான பயிற்சிகள்.

நமது நாட்டில் உணவு காட்டை நிறுவ வேண்டியதன் அவசியம்

தற்போது இலங்கை உள்ள சூழ்நிலை யில் தற்சார்பு பொருளாதாரம் மிகவும் முக் கியமாக காணப்படுவதனாலும் மற்றும் எமது காலநிலை வலயங்களும் இதற்கு உகந்ததாக அமைவதனாலும்உணவு காடு களை அமைத்து பயன்பெற்றுக்கொள்ள முடியும். இதிலிருந்து கிடைக்கும் உண வுகளில் அனைத்து ஊட்டச்சத்துக்களை யும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பயிர்களை, தாவரங்களை தெரிவு செய்வ தன் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்கவும் முடியும். பல வகையான பயிர் களை பயிரிடுவதனால் சந்தையில் கேள்வி குறைவான உணவு வகைகளை மேம்ப டுத்தப்பட்ட உணவுகளாக செய்வதன் மூல மும் வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடி யும். உணவு காடு ஒன்றை ஆரம்பிப்பதில் மட்டும் நிலம் மற்றும் சிறிய அளவு மூலத னம் தேவைப்படும். இடுபொருள் செலவுக ளும் மிகவும் குறைவு. எமது காலநிலையை ஒத்த இந்தியாவில் உணவு காடுகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# இயற்கை முறைக் கோழி வளர்ப்பின் தோல்விக் கதை



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

இந்த வாரம் ஒரு கோழிப் பண்ணையைப் பற்றி சொல்லப் போகிறேன். வவுனியா பூவரசன்குளத்துக்கு அருகில் புலம்பெயர்ந்த ஒருவரினால் நடத்தப்பட்ட ஒரு கோழிப் பண்ணைதான் இன்றைய கதைக் களம். 3000-க்கும் மேற்பட்ட கொல்லைப்புற கோழிகளை **[backyard poultry]** அவர் வளர்த்திருந்தார். **you tube** போன்ற சமூக ஊடகங்களின் பாதிப்பில் இந்தப் பண்ணையை தொடங்க அவர் முடிவு செய்திருந்தார். குறிப்பாக இயற்கை முறையில் உள்ளூரில் கிடைக்கும் தீவன மூலப் பொருட்களைக் கொண்டு அந்தப் பண்ணையை நடத்தவேண்டும் எனும் சிந்தனையில் மேற்படி பண்ணையைத் தொடங்கியிருந்தார்.

ஓர் ஏக்கர் வரையிலான தனது நிலத்தைச் சூழ மதில்ச்சுவர் அமைத்து சுற்றிவர வலைகளைக் கொண்டு மூடி இந்த பண்ணை அமைக்கப்பட்டது. அதாவது கோழிகளை திறந்து வளர்க்கத் தக்க வகையிலான மூடிய அமைப்பு. அத்துடன் கோழிக் கொட்டகையும் அதிக செலவில் கருங்கற்களால் சுவர் எழுப்பப்பட்ட பாரிய கட்டமைப்பாக அமைக்கப்பட்டது.

கோழிக்குஞ்சுகளை ஒரு வார இடைவெளியில் இரண்டு தடவைகளில் அரசாங்க பண்ணையில் இருந்து அவர் பெற்றிருந்தார். அந்தக் கோழிக் குஞ்சுகள் கண்டி, கறந்தகொல்லை எனும் இடத்திலுள்ள கோழி இனவிருத்தி மையத்தில் மேம்படுத்தப்பட்ட கொல்லைப்புற வளர்ப்புக்கு உருவாக்கப்பட்ட வகையின. முறையான தீவனம் மற்றும் பாரமரிப்பை வழங்கினால் வருடத்துக்கு 200 வரையிலான முட்டைகளை இடக்கூடியன. உரிமையாளர் வர்ணங்களில் உள்ள கோழிகள் எல்லாம் நாட்டுக் கோழிகள் என்ற புரிதலுடன் இருந்ததால் என்னவோ அவற்றை வளர்க்க தொடங்கினார். அவர் புலம் பெயர முன் அவரது கிராமத்தில் இருந்த நாட்டுக் கோழிகளாகவே அவர் இவற்றைக் கருதினார். பெரியளவு பராமரிப்பு தேவையில்லை எனவும் காணியில் உள்ள புழு பூச்சிகளே போதும் என கருதியிருக்கிறார். அவர் வாழ்ந்த நாட்டில் இயற்கையாக வளர்க்கப் படும் கோழிகளுக்கும் அவற்றின் முட்டைகளுக்கும் நல்ல கிராக்கி உள்ள படியால் அந்தந்த முறைகளின் மேல் ஆசைப் பட்டு அவர் இந்த பண்ணையை உள்ளூரில் உள்ள தனது உறவினரின் மூலம் ஆரம்பித்தார்.



கோழிக் குஞ்சுகளுக்கு தொடக்கம் முதலே உள்ளூரில் கிடைக்கும் தேங்காய்ப் பூ, அரிசிக் குருணல், மீன் கழிவுகள், மற்றும் சில தானியங்களைக் கொண்ட கலவை உணவே வழங்கப்பட்டது. அவரின் ஊழியர்கள் இந்தச் செயற்பாட்டை தினமும் செய்வார்கள். மேலதிகமாக சந்தைகளில் கிடைக்கும் மேலதிக காய்கறிக் கழிவுகளையும் வழங்குவார்கள். அங்காங்கே பானைகளை கவிழ்த்து கறையான் உற்பத்தி செய்தும் உணவாக வழங்கப்பட்டன. பண்ணையில் பல இடங்களில் அசோலா தொட்டிகள் கட்டப் பட்டு அசோலா உற்பத்தியும் இடம்பெற்று கோழிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், அவரின் ஓர் ஏக்கர் நிலத்தில் பெரும்பாலான நேரங்களில் கோழிகள் மேய்ந்தன. இரவில் கொட்டகைகளில் அவை அடையும்.

இயற்கை முறை என்பதால் அவர் வர்த்தக ரீதியான கோழித் தீவனங்களை கொடுத்திருக்கவில்லை. கோழிகளுக்கு செலுத்தும் தடுப்பூசிகளைக் கொடுக்கவும் இல்லை. குடற்புழு நீக்க மருந்துகளை, கனியுப்புக் கலவைகளை வழங்கவும் இல்லை. அதாவது இயற்கை முறை வளர்ப்புக்கு இது தேவை இல்லை என்னும் அவரது காரணத்தால் அதைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. .இங்கு முக்கிய விடயம் இந்த பண்ணையை தொடங்க அவர் கால்நடை வைத்தியர் போன்ற துறை சார்ந்தவர்களுடன் ஆலோசிக்க வில்லை. தனது நாட்டில் உள்ள சேதன முறையிலான கோழி வளர்ப்பையும் **youtube** போன்ற ஊடகங்களில் உள்ள சேதன மற்றும் இயற்கை முறையிலான கோழி வளர்ப்பு வீடியோக்களையும் பார்த்து விட்டே தொடங்கியிருந்தார். இத்தனைக்கும் அவர் வாழும் நாட்டில் ஒரு கோழியைத் தன்னும் வளர்த்திருக்கவில்லை. உரிமையாளர் பண்ணையின் தொடக்கத்தில் மட்டுமே இங்கு இருந்ததோடு, பின் காலங்களில் வெளிநாட்டில் இருந்தபடியேதான் பண்ணையை அவதானிப்பார். மற்றபடி இங்குள்ள உறவினரும் வேலையாட்களும் தான். உரிமையாளருக்கும் உறவினருக்கும் வேலையாளுக்கும் கோழிகளின் வளர்ச்சி தொடர்பாக ஒரு புரிதலும் இருந்திருக்கவில்லை.

தேவையான தடுப்பூசி போடாததால் கணிசமான அளவில் கோழிகள் நோயுற்று இறந்தன. கோழிகளின் வளர்ச்சியும் குறைவாகத்தான் இருந்தது. அதுவும் சமசீராக இருக்கவில்லை. சில கோழிகள் பெரிதாகவும் சில சிறிதாகவும் இருந்தன. ஆறேழு மாதமாகியும் அவை முட்டையிடத் தொடங்கவில்லை எனும் போதுதான் கால்நடை வைத்திய ஆலோசனைக்கு வந்திருந்தனர். குறிப்பாக ஏதும் விசேட மருந்து இருக்குமா என கேட்கவே வந்திருந்தனர். அப்போதுதான் நான் அந்தப் பண்ணையை முதன் முதலில் பார்த்தேன். என்னை பார்க்க முன் பல விலங்கு உணவுக் கடைகள் **[farm shops]** மற்றும் சில கால்நடை வைத்திய அலுவலகச் சிற்றூழியர்களிடம் ஆலோசனை கேட்டுத்தான் வந்திருந்தனர்.

சில மருந்துகளை கொடுத்தும் இருந்திருகின்றனர்

நான் போனபோது அவை எழு மாத வயதைத் கொண்டிருந்தன. அவரின் மூவாயிரம் கோழிகளில் அரைவாசிக்கும் அதிகமாக இறந்து போயிருந்தன. ஏனையவையும் மெலிந்தும் வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இன்றியும் இருந்தன. அவருடைய பண்ணையில் இருந்த மரங்களின் அடிப்பகுதி பட்டைகளைக் கூட அவை உரித்து உண்டிருந்தன. நிலத்தில் புல் பூண்டுகள் கூட இருக்கவில்லை. அவற்றையும் அவை விடுவதில்லை. பல கோழிகளின் பின்புறம் கொத்தப்பட்டு காயமிருந்தது. அந்த நாட்களில் அவை ஒன்றையொன்று கொத்தி உள் அவயவங்கள் சேதப்பட்டு பல இறந்திருந்தன. இறந்த கோழிகளை ஏனைய கோழிகள் கொத்தி உணவாகவும் கொள்ளத் தொடங்கியிருந்தன. [cannibalism] ஒரு முறை பண்ணைக்குள் வந்த ஒரு சாரைப் பாம்பைக் கூட கோழிகள் கொத்தி உண்டதாக அறிய முடிந்தது. கடும் புரத குறைபாடு பண்ணையில் தெளிவாக தெரிந்தது. ஆரம்பத்தில் இருந்த அசோலா தொட்டிகள் தூர்ந்து போயிருந்தன. கோழிகள் நேரடியாக அவற்றைத் தின்று தீர்த்திருந்தன. பொதுவான பண்ணையின் சுகாதாரம் குறைவாகவே இருந்தது. உயிர் பாதுகாப்பும் [bio security] இல்லை. யாரும் வரலாம் போகலாம். இந்த நிலைக்கு கோழிகளின் இனம் கூடாது என நினைத்து குருநாகலில் தனியார் பண்ணை ஒன்றில் இருந்து புதிய ஆயிரம் வரையான கோழிக் குஞ்சுகளை வாங்கி தனியாக அடைத்தும் வைத்திருந்தனர். ஆனால் அதே வளர்ப்பு முறைதான். அதே இயற்கை உணவு தான். அந்தக் கொள்கையை அவர்கள் கைவிடவில்லை.



பண்ணையின் நிலை பற்றி வெளிநாட்டில் இருந்த உரிமையாளரிடம் தெரிவித்தேன். இந்தக் கோழிகளை தொடர்ந்து வைத்திருப்பது பாரிய நட்டத்தையே தரும் என தெரிவித்தேன். அவர் அதனை புரிந்து கொள்வதாகவே இல்லை. அவருக்கு தேவை இந்த நிலையை உடனடியாக மாற்றக் கூடிய மருந்து. அதனைச் செய்யக் கூடிய வைத்தியர். கோழிகள் முட்டையை உடனடியாக போட வேண்டும். எனக்கு பிறகும் வவுனியாவில் இருந்த பல கால்நடை வைத்தியர்கள் வந்து பார்த்திருந்தனர். யாரும் அவரின் நிலைப்பாட்டுக்கு சரி வராததால் வெளி மாவட்ட போலி வைத்தியர்கள் வரை உதவியை நாடியிருக்கிறார். அவர்கள் அவரிடம் கறக்க கூடிய தொகையைக் கறந்தும் மருந்துகளை விற்றும் பணம் சம்பாதித்தனர். அவர்களை தொடர்பு கொள்ள நாட்டில் உள்ள வாட்ஸ்சப் [whatsapp] குழுக்கள் உதவியிருக்கின்றன. கடைசியில் கடும் செலவுக்கு மத்தியில் அவரது எஞ்சிய கோழிகளை விற்று விட்டு பண்ணையை மூடி விட்டார். அதாவது இலங்கையில் இயற்கை முறையில் ஒரு கோழிப் பண்ணையை நடத்த முடியாது எனும் நிலைபாட்டை அவர் எடுத்ததாகவும் கோழிப் பண்ணை போட வந்த பல புலம் பெயர் நண்பர்களை தடுத்ததாகவும் அறிய முடிந்தது.

அவரின்,பண்ணை தோல்வியடைந்ததற்குரிய காரணிகளை ஆராய்வோம்.

அவர் கோழிப் பண்ணையை தொடங்க முன்கால்நடைவைத்தியர்ஆலோசனையை பெற வில்லை. என்பதுடன் அவர் பண்ணையை தொடங்கிய பகுதியில் கோழிகளின் வளர்ச்சிக்கு தேவையான உணவு மூலப் பொருட்கள் கிடைப்பது சிரமம். அத்துடன் அவர் முறையான உணவுக் கலவையை செய்ய [feed formulation] வில்லை. அதற்குரிய முறையான வல்லுனர்களிடம் ஆலோசனை பெறவில்லை. வர்த்தக ரீதியான உணவு குஞ்சு தீவனம், வளர் தீவனம்,முட்டைத்தீவனம்என வேறுபாட்டுடன் தயாரிக்கப்படும் கோழிகளின் ஒவ்வொரு வயது மற்றும் தேவைக்கு ஏற்ப அவற்றில் புரதம், எரி சக்தி,கல்சியம் என ஊட்டச் சத்துகள் வேறு வேறு அளவில் காணப்படும்.அதனை தவிர்த்து உணவை தயாரிக்கும்போது அந்தந்த ஊட்டச் சத்துக்கள் கிடைக்கும் வகையில் அமைய வேண்டும். வெறுமனே குருணல் அது இது என்று கொடுத்தால் கோழிகளுக்கு முறையான ஊட்டம் கிடைக்காது. வளர்ச்சி பாதிக்கபடும். முட்டையிடாது. மேலும், குஞ்சுப் பருவத்தில் சரி விகித தீவனம் கிடைக்கா விட்டால் அவற்றின் இனப்பெருக்க தொகுதி குறிப்பாக முட்டை தொடர்பான உள் உறுப்புகளின் வளர்ச்சி பாதிக்கப் படும். முட்டை இடப் பிந்தும். உற்பத்தி குறையும்.

இங்கு அவர் வளர்த்தது முன்னைய காலத்தில் வீடுகளில் அடை வைத்து பொரிக்கும் நாட்டுக் கோழிகள் கிடையாது. அந்த நாட்டுக் கோழிகள் மிகக் குறைவான முட்டைகளையே இடும். அவற்றுக்கு விசேட உணவுகள் தேவை இல்லை. சூழலில் உள்ள பூச்சி புழுக்கள் மற்றும் உணவு கழிவுகளை உண்டு முட்டையிடும். இங்கு இருந்தவை மேம்படுத்தபட்ட கொல்லைப் புறக் கோழிகள். இருநூறு வரையான முட்டைகளை இடக் கூடியன. அவற்றுக்கு சரிவிகித உணவுகளை வழங்க வேண்டும். பல கோழி வளர்ப்பாளர்கள் வர்ணமயமான இந்த கோழிகளை வாங்கி அவற்றை முன்னைய நாட்டுக் கோழிகளை வளர்ப்பது போல வளர்க்க வெளிக்கிட்டு சரியான உற்பத்தியை பெறுவதில்லை. மேலும், இவர் அதிகளவில் கோழிகளை வளர்த்ததால் அவைற்றுக்குரிய உணவுத் தேவையும் அதிகமாக இருந்தது. அதனை நிறைவு செய்ய முடியவில்லை. அதனை அவரோ அவரது ஊழியர்களோ உணரவும் இல்லை.

கோழிகளுக்குத் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக மக்களிடம் தவறான புரிதலே உள்ளது. சில ஊடகங்கள் தடுப்பூசியை ஏதோ கூடாத பண்டம் போல சித்தரிகின்றன. கோழிகளுக்கு ரணிகட், கம்போரோ, கோழி அம்மை போன்ற ஆபத்தான நோய்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. மனிதனுக்கு வழங்கும் BCG, போலியோ, கொரோனா தடுப்பூசிகள் போல. அவை முறையாக வழங்கப் பட்டிருந்தால் கோழிகளின் இழப்புகள் ஏற்பட்டிருக்காது. இலங்கையில் கோழி வளர்க்கும் பெரும்பாலானவர்கள் தடுப்பூசிகள் பற்றி அறிவதில்லை. வெறுமனே கோழி உணவுக் கடைகளில் உள்ள நுண்ணுயிர் கொல்லிகளுடன் மாத்திரம் நின்று விடுகின்றனர். தடுப்பூசிகள் நோய் வராமல் தடுக்கக் கூடிய உன்னத பொருளாகும்.

அவருடைய பண்ணை சுத்தமாக பேணப்பட வில்லை யாரும் வரலாம் போகலாம். இதனால் நோய்கள் ஏற்பட்டிருக்கிறது. மேலும், இந்த தொழிலைச் செய்ய பொறுமையும் திறனும் அவசியம். கொஞ்சம் கொஞ்சமாக செய்யத் தொடங்கியிருக்கலாம். ஒரேயடியாக ஆயிரக் கணக்கில் கோழிகளை அனுபவம் இல்லாதவர்கள் அதுவும் புதிய முறையில் வளர்க்க தொடங்கியதால் இந்தமாதிரி நட்டம் ஏற்பட்டிருகிறது. தேவையற்றவிதத்தில் கட்டுமானத்துக்கு செலவழித்து உள்ளனர். அலகு வெட்டுதல் போன்றவற்றை செய்யாததால் கோழிகள் கொத்துப்பட்டன. இப்படியாக பல குறைபாடுகள். அவற்றை ஒவ்வொன்றாக திருத்தியிருந்தால் அவரது பண்ணை வெற்றி பெற்றிருக்கும். இன்று உள்ளது போல புதர் மண்டிய கட்டிடமாக இருந்திருக்காது.

இதுபோன்ற பல பண்ணைகள் எமது பகுதிகளில் ஆயிரக் கணக்கில் உள்ளன. எல்லாம் அநியாயமாகப் போன எம்மவரின் பணம். அடுத்த வாரம் இன்னுமொரு கதை. இன்னுமொரு தோல்வியடைந்த கதை. பார்ப்போம். *



# வெல்லும் வழி...

## வேதநாயகம் தபேந்திரன்





**அவர்** ஒரு அரசாங்க உத்தியோகத்தர். மூத்தது மகன். அடுத்த இரண்டும் பெண் பிள்ளைகள். மூத்த மகன் ஓஎல் (சாதாரண தரம்) ஏஎல் (உயர்தரம்) உடன் படிப்பை நிறைவு செய்து விட்டான். மேற்கொண்டு படிப்பு ஓடவில்லை. அவனுக்கு ஏற்கனவே வீட்டில் அயலில் உள்ள மோட்டார் சைக்கிள்களைத் தனக்குத் தெரிந்த பாட்டில் திருத்திப் பழக்கம்.

அதனால் தொழிநுட்பக் கல்லூரியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் டிப்பிளோமா கற்கையைத் தொடரப் போகிறேன். அதனை நிறைவு செய்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று நிறைய உழைக்கலாமென்றான்.

தாய் தந்தையரும் அவனது விருப்பப்படியே அவனது இயல்பு தெரிந்து படிக்க விட்டனர். அவனும் மிகுந்த அக்கறையுடன் கற்கையைத் தொடர்ந்தான். ஓய்வு நாள்களில் படித்ததை வீட்டிலும் பிரயோகிக்கத் தொடங்கினான். அவனது அயலட்டை ஆள்கள் அவனிடம் தமது மோட்டார் சைக்கிளைக் கொடுத்துத் திருத்தி எடுத்தார்கள்.



கற்கை நெறியை நிறைவு செய்த நாள்களில் அவன் வீட்டிலேயே நாளாந்தம் சில ஆயிரம் ரூபாக்களை உழைக்கும் அளவுக்கு உயர்ந்தான். தற்போது மோட்டார் சைக்கிள் மெக்கானிக் தொழிலில் நாட்டமுள்ள 4 இளைஞர்களைத் தன்னுடன் வேலைக்கு வைத்துள்ளான்.

யாழ் - கண்டி வீதியிலிருந்து அவனது வீடு 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள் கிராமம் ஒன்றினுள் உள்ளது.

இந்த இளைஞனது தொழில் திறமை, நேர்மை, நியாயபூர்வமான கட்டணம், சொன்ன நேரத்திற்கு வேலையைச் செய்து கொடுக்கும் பண்பு, மோட்டார் சைக்கிள், இயந்திரம் பார்த்துத் திருத்துவதில் உள்ள நிபுணத்துவம் ஆகியவை காரணமாக வேறு இடங்களிலும் இருந்தும் மோட்டார் சைக்கிள்களைத் திருத்தக் கொண்டு வந்து கொடுக்கின்றனர். அவன் நாளாந்தம் பல ஆயிரம் ரூபாக்களை உழைக்கும் ஒரு தொழிலதிபராக உயர்ந்துள்ளான்.

உத்தியோகத்தரின் பிள்ளை கட்டாயம் உத்தியோகம் தான் பார்க்க வேண்டுமென அவனது பெற்றோர் வறட்டுப் பிடிவாதம் பிடிக்கவில்லை. தமது மகனை அவனது போக்கில் அவனது திறமையின் அடிப்படையில் வாழட்டுமென விட்டு விட்டார்கள்.

கையெழுத்து வைத்து விட்டுப் பலரிடம் கீழ் பணிந்து மணிக்கூடு பார்த்து வேலை செய்யாமல் தனது வீட்டில் இருந்த இடத்திலேயே தொழில் செய்து ஒரு அரசாங்க அல்லது தனியார் துறை உத்தியோகத்தர் எடுக்கும் சம்பளத்தை விடப் பல மடங்கு உழைக்கின்றான்.

எதிர்காலத்தில் பெரு வீதியின் கரையோரமாகத் தொழில் ஸ்தாபனத்தை விரிவாக்கம் செய்வானாயின் பெரும் தொழிலதிபராக முடியும்.

எமது நாட்டின் உழைப்பாளர் சனத்தொகையில் வெறும் 12 வீதமானோர் மட்டும் தான் அரச பணியாளராக உள்ளனர். மிகுதி 88 வீதமானோரும் ஏதோவொரு தொழில் செய்து வருமானம் ஈட்டி வாழ்கின்றனர்.

தொழில் கல்வியை மேம்படுத்தி அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் பல வகைப்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கி உள்ளது.

ஆனால் இதனைப் பயன்படுத்தி எமது நாட்டவர்கள் முன்னேறிய வீதம் மிகவும் குறைவானது. அண்டைய நாடான இந்தியா தொழில் கல்வியை மிகச் சிறந்த முறையில் வளர்த்துள்ளது.

உலகில் பணச்செழுமையுடைய நாடுகள் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பை விருப்பத்துடன் வழங்குகின்றனர்.

அதனால் தெற்காசிய, கிழக்காசிய வட்டகையில் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் முதலாவது நாடாக இந்தியா உள்ளது.

நாமும் தொழில் கல்வியின் ஊடாக வீட்டையும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும். தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பேரிடர் போன்ற நிலைமையை வெற்றி கொள்ள இதுவே சிறந்ததொரு வழி. *

# இந்திய மீனவர்களுக்கு ........



(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அள்ளிக்கொண்டு செல்கின்றார்கள். உதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு ட்ரோலரில் கொண்டு செல்லப்படுகின்ற இறால், கடலட்டை, நண்டு, கணவாய், மீன் என்பனவற்றின் பெறுமதி இந்திய ரூபாவில் குறைந்தது 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு படகில் இவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றது என்றால், ஒரு நாளைக்கு வரும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளில் எவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்று கணக்குப் பாருங்கள். வாரத்தில் மூன்று நாள். மாதத்தில் 12 நாட்கள். எமது வளங்கள் இவ்வாறு மூவாயிரத்துக்கும் அதிகமான படகுகளில் அபகரிக்கப்படுகின்றன" என்ற தகவலையும் பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்தார். இது அதிர்ச்சியளிக்கும் தகவல்தான். தமிழ்த் தலைமைகள் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஏற்கனவே தமது எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றன. இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கு உறுதியான நிரந்தரத் தீர்வு காணப்படாத வரையில் வட பகுதி மீனவர்களின் வளங்கள் சூறையாடப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்


அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)


5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# "பனங்கட்டிக் கஞ்சி குடிச்சா பஞ்சி சுணைக்கெட்டுப் போகும்"

## சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?





பனங்கட்டிக் கஞ்சி குடிச்சா பஞ்சி சுணைக்கெட்டுப் போகும் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. நல்ல அளவாத்தீட்டின குத்துப்பச்சை அரிசி, தேங்காய்ப் பால், கலப்படம் இல்லாத பனங்கட்டி, பயத்தம் பருப்புப்போட்டுக் காய்ச்சிற கஞ்சியிலை விற்றமின், கனியுப்பு, கொழுப்பு, புரதம், காபோவைதரேற்று, நார்ச்சத்து எண்டு எல்லாச் சத்தும் இருக்கெண்டு ஆச்சி சொல்லுவா.

எப்பிடியும் கிழமையில ரெண்டு மூண்டு நாளைக்கு கால மயில ஆச்சி உந்தக் கஞ்சி காய்ச்சுவா. அப்பு சுருட்டுச் சுத்தப் போகமுந்தி வயிறுமுட்ட ரெண்டு மூண்டு சிரட்டை கஞ்சி விட்டுப்போட்டுப்போவார். முந்தி நாங்கள் கஞ்சி சிரட்டையில தான் குடிக்கிறனாங்கள். ஆச்சி தேங்காய் திருவிமுடிய ரெண்டு மூண்டு சிரட்டையளை எடுத்து அதுகளின்ரை முதுகை பன்னச் சத்தகத்தாலை வடிவாச் சொறிஞ்சு ஒரு தும்பும் இல்லாமல் சில வெளிநாட்டு மாப்பிளைமாரின்ரை தலை மாதிரி நல்ல வழு வழு எண்டு எடுத்துப் போட்டு அடுக்களை இறப்பிலை இல்லாட்டில் தலைவாசல் செத்தையிலை செருகிவைப்பா .



இளஞ்சூட்டில சிரட்டையில ஊத்தின பனங்கட்டிக் கஞ்சியை முத்தத்தில வேப்பமரத்துக்கு கீழை இருந்து எல்லாரும் சேர்ந்து பேசிப்பறைஞ்சு குடிக்கிறதிலை இருக்கிற சந்தோசம் வேறை ஒண்டிலையும் இல்லை எண்டுவார் எங்கட அப்பு. அப்பு சுருட்டுக்கொட்டிலுக்குப் போகமுந்தி நாங்கள் எல்லாரும் சேந்து குடிப்பம். குடிச்சு முடிஞ்ச பிறகு குடிச்ச சிரட்டையளைக் கழுவி இருந்த இடத்திலை செருகி வைப்பம். அப்பதான் பேந்தும் குடிக்கப் பாவிக்கலாம்.

இப்பிடி சேர்ந்து ஒன்டுமோண்டா இருந்து திண்டு குடிச்சு இருந்ததால முந்திக் குடும்பங்கிளிலை நல்ல பிணைப்பும் (connection) தொடர்பு (contact) இருந்தது. ஆளாளுக்கு அன்பும் மதிப்பும் வைச்சிருந்தவை. ஒவ்வொருத்தரைப் பற்றியும் அவையின்ரை பிரச்சினைகள் சரிபிழையள் குறை நிறையள் எல்லாம் எல்லாருக்கும் தெரிய வரும். ஆளாளுக்கு ஒத்தாசையா இருப்பினம் ஆறுதலா இருப்பினம். உப்பிடி சேந்து இருந்து திண்டு குடிச்சு கதைக்கிற இடங்கள்தான் உண்மையான கவுன்சிலிங்க் சென்டர்கள் . உப்பிடியான வீட்டு விறாந்தையளிலை சந்தோசம் குந்தி இருந்து நாள்முழுக்கத் தாயம் விளையாடும்.

பேந்து இடம்பெயர்வுகள் வந்து சனம் அங்கினையும் இங்கினையுமா அலமலந்து திரியத் தொடங்கவும் நாகரீகம் எண்டு அலசேந்தித்திரியவும் வேலைப்பளுக்கள் கூடவும் உந்த ஒண்டா இருந்து தின்னுற குடிக்கிற விளையாட்டுகள் நிண்டு போட்டுது. உதால பிணைப்புகள் இல்லாமல் போட்டுது. ஆனாத் தொடர்புகள் இருந்தது. அடிக்கடி செத்தவீடு, பூசைவீடு, கலியாண வீடு, சாமத்திய வீடு, வீடுகுடிபூறல், கோயில் திருவிழாக்கள், வாசிகசாலை மாதிரி பொது இடங்களிலை சந்திச்சுச் சுகம் துக்கங்களை விசாரிச்சுக் கொள்ளுவினம். இல்லாட்டா தூர எங்கினேக்கையும் இருந்தா போன் பேசுவினம். போறவாற வையிட்டை எங்கடை அவை எப்பிடி இருக்கினம் விசாரிச்சுக் கொள்ளுவினம்.

## எங்கட ஆச்சி

- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

ஆனாப்பேந்து புலம் பெயர்ந்து போனபிறகு உந்தத்தொடர்புகளும் குறைச்சு போச்சு. ஏன் சில இடங்களில இல்லாமலும் போட்டுது. அதுக்கு அவை வேலைப்பிரச்சினை, நேரம் பிரச்சினை இனி வேற வேற சித்தாந்தங்கள் வேதாந்தங்கள் விளக்கங்கள் எல்லாம் சொல்லுவினம். கனபேர் தங்களுக்கு இனம் சனம் ஊரிலை இருக்குது எண்டதையே மறந்து போச்சினம். இஞ்சை பாத்தியள் எண்டால் உங்க கன வீடு வழியை பிணைப்பும் இல்லாமல் தொடர்பும் இல்லாமல் வயதுபோன கன சீவன்கள் தனிய இருந்து துடிச்சுக்கொண்டு இருக்குதுகள். என்ரை பிள்ளை குட்டியள் மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளையளைப் பாக்கமாட்டமோ எண்டு கண்ணீரும் கம்பலையுமா ஏம்பலிச்சுக்கொண்டு இருக்குதுகள் . இனி அதுகளை இருக்கும் வரையும் வேலைவெட்டி அது இதெண்டு எட்டிப்பாக்காம இருந்து போட்டு பேந்து சீவன் போனபிறகு வந்து கிறுவை, தோழா, பறை, வெடி, நோட்டீசு, பூசை, புத்தகங்கள், அந்தத் தானம், இந்தத்தானம், எண்டு விலாசம் காட்டுறதிலை என்ன கிடக்கெண்டு விசர்ச்சனங்கள் நினைக்குதோ தெரியேல்லை.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2023இல் வெளியிடப்பெற்றது.